Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 10 திங்கட்கிழமை (27.10.2014) பக்கங்கள் 20 ஓசை – 027

## நால்வரை கடித்த நாய் தெல்லிப்பளையில் உயிரிழப்பு

**கொழும்பிற்கு அனுப்பப்பட்டது தலை**

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளைப் பகுதியில் நான்கு பேரைக் கடித்த பின்னர் உயிரிழந்த நாயினுடைய தலை பரிசோதனைகளுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி ப.நந்தகுமார் நேற்றுத் தெரிவித்தார்.

தெல்லிப்பளைச் சந்தியில் கடந்த வெள்ளிக்கிழமை நடமாடித் திரிந்த மேற்படி நாய் வீதியால் சென்ற நால்வரைக் கடித்துள்ளது.

கடியுண்டவர்கள் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

இதனையடுத்து நாயைப்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## புலிகள் மீதான தடை நீக்கம் வெளியுறவு அமைச்சே காரணம்

### இராஜதந்திரி தயான் ஜயதிலக தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சு சரியான முறையில் செயற்பட்டிருந்தால் புலிகள் மீதான தடை நீக்கத்தை தவிர்த்திருக்க முடியுமென சிரேஷ்ட இராஜதந்திரி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

திவயின பத்திரிகைக்கு அளித்த நீண்ட நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை நீக்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாட்டை விமர்சிக்கும் நீதித்துறை விவகாரம். எனினும் இந்த விவகாரத்தில் இலங்கை அரசின் வெளியுறவுத்துறை சரியான முறையில் செயல்பட்டிருந்தால், குறித்த தடை நீக்கத்தை தவிர்த்திருக்க முடியும்.

(19) ஆம் பக்கம் பார்க்க...



## அரச நிதி ஒதுக்கீட்டை

# ஏனைய மாகாணங்களைப் போல் வடக்கு பயன்படுத்துவதில்லை



### அமைச்சர் சுசில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு மாகாணசபைக்கு மற்றைய மாகாணங்களைப் போன்றே நிதி ஒதுக்கப்பட்டாலும் அவர்கள் அந்த நிதியை சரியாகப் பயன்படுத்தவில்லை.

மாறாக வடக்கு மக்களின் வாழ்வாதாரம் உட்பட பல்வேறு விடயங்களில் கரிசனை காட்டாத வடக்கு மாகாண சபை புலம்பெயர்ந்தவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே செயற்பட்டு வருவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதுகுறித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிறேமஜயந்த தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாணசபைக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்தபோதிலும், ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு பகுதி மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து இரண்டு விடயங்கள் வெளிப்படுகின்றன. ஒன்று அவர்கள் அரச நிதியை விரும்பவில்லை. அல்லது கிடைக்கும் நிதியை மற்றைய மாகாணங்களைப் போன்று பயன்படுத்தத் தெரியவில்லை. வடக்கு மக்களைப் புறக்கணித்து, புலம்பெயர் அமைப்புக்களின் நிகழ்ச்சிநிரலுக்கு உட்பட்டு அவர்கள் இயங்குவதால்தான் இத்தகைய பிரச்சினைகள் தேன்றுகின்றன. ஆனால் வடக்கு மக்கள் தெளிவாக உள்ளனர். ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட சமயம்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## ஜனாதிபதியை சீற்றமடைய வைத்த ஜாதிக ஹெல உறுமயவின் கருத்துக்கள்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவுடனான சந்திப்பின்போது அவர்கள் முன்வைத்த கருத்துக்களால் சீற்றமடைந்த ஜனாதிபதி அந்தக் கூட்டத்திலிருந்து இடைநடுவில் வெளியேறியதாக சண்டே ரைம்ஸ தெரிவித்துள்ளது.

இது குறித்து அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜாதிக ஹெல உறுமயவுடனான சந்திப்பின் ஒரு கட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீற்றமடைந்து தனது ஆசனத்திலிருந்து எழுந்தார். நான் வேறு சிலரைச் சந்திக்க வேண்டியுள்ளது எனத் தெரிவித்து விட்டு அங்கிருந்து வெளியேறினார்.

அவ்வாறு அங்கிருந்து வெளியேறும்போது ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலிய ரத்ன தேரரைப் பார்த்து நானும் நீங்களும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்து விட்டு, ஜனாதிபதியை தோற்கடிக்கப் போவதாக தேரர் தெரிவித்துள்ளமை குறித்து தனது அதிருப்தியை வெளியிட்டார்.

ஜனாதிபதி மாத்தறையின் கம்புறுபிட்டியவில் உள்ள பலட்டுவயில் பிறந்தவர். அத்துரலிய

(19) ஆம் பக்கம் பார்க்க...

## யாழ்.வந்த கமலேஷ் சர்மா ஆளுநர் உட்பட பலருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கை வந்துள்ள பொது நலவாய நாடுகளின் செயலாளர் கமலேஷ் சர்மா நேற்று யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்து பார்வையிட்டதுடன், பல சந்திப்புக்களிலும் கலந்து கொண்டார்.

நேற்று முற்பகல் 10.00 மணிக்கு வடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு விஜயம் செய்த அவர், அங்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பை முடித்துக் கொண்ட அவர் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களையும், தென்மராட்சியில் அமைக்கப்பட்டுள்ள இந்திய வீட்டுத்திட்ட வீடுகளையும் பார்வையிட்டார்.

பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். ரில்கோ விடுதியில் சிவில் சமூகப் பிரதிநிதிகளை மூடிய அறைக்குள் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது ஊடகவியலாளர்கள் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

## போர்க்குற்ற விசாரணைப் படிவம் விநியோகித்தவர் கிளி.இல் கைது



ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் குழுவுக்கு சாட்சியமளிப்பதற்கெனத் தயாரிக்கப்பட்ட படிவங்களை கிளிநொச்சிப் பகுதியில் பொதுமக்களுக்கு வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை கொழும்பில் இருந்து சென்ற பயங்கரவாதத் தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

சின்னத்தம்பி கிருஸ்ணராசா என்ற 6 பிள்ளைகளின் தந்தையே நேற்று முன்தினம் மதியம் கிளிநொச்சி இரணைமா நகர்ப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் ஐ.நா. விசாரணைக்கான படிவங்களை மக்களுக்கு விநியோகித்துக் கொண்டிருந்த சமயமே கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(19) ஆம் பக்கம் பார்க்க...

## சாதாரண பரீட்சை திகதிகளில் மாற்றம் எதுவும் இல்லை

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பு**

(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் டிசம்பர் மாதம் நடை பெறுமெனவும், அதில் மாற்றம் எதுவும் செய்யவில்லையென்பதுடன் இவ்வாண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 5 இலட்சத்து 77 ஆயிரத்து 84 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.எம்.என்.ஜெயந்த

(19) ஆம் பக்கம் பார்க்க...

## அதிகரித்துள்ள துண்டுவிழும் தொகை மக்கள் மீது பொருளாதார அழுத்தம்

### முஸ்லிம் காங்கிரஸ் கரிசனை

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை அதிகரித்துக் காணப்படுவதால் மக்கள் பாரிய பொருளாதார அழுத்தத்தை எதிர்கொள்ள நேரிடலாம் என முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது

2015ஆம் ஆண்டுக்கான

(19) ஆம் பக்கம் பார்க்க...





யோகபுரம் மத்தி ஒரு ஏக்கர் பகுதியில் குடிமனைக்குள் புகுந்த முதலை பொதுமக்களால் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. பொலிஸார் இந்த முதலையினை வவுனிக் குளத்தில் விட்டுள்ளனர். (140)

# இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் வடக்கு மாகாண பண்பாட்டு பெருவிழா

(வவுனியா)

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தி னால் வருடாவருடம் நடாத்தப்பட்டு வருகின்ற பண்பாட்டு பெரு விழா இவ்வாண்டு வவுனியா மாவட்டத்தின் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் அடுத்த மாதம் 1 ஆம், 2 ஆம் திகதிகளில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் சிறந்த நூற்பரிசுத் தேர்வில் துறை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட நூற்களினதும், எழுத்தாளர்களின் விபரங்களும், வடக்கு மாகாண முதலமைச்சர் விருதிற்கு துறை ரீதியாக தெரிவு செய்யப்பட்டோர் விபரங்களும் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களுக்கான கௌரவிப்பு வைபவம் வட மாகாண பண்பாட்டுப் பெருவிழாவின் நிறைவு நாளாகிய 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 2 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

உயர் கல்வி - 'மாற்றம் காணும் கல்வி உலகு டன் இணைதல்' த.கலாமணி கலைஅகம், அல் வாய் வடமேற்கு அல்வாய். ஆய்வும் விமர்சன மும் - 'அறிவின் சமூகவியல் சிந்தனைகள்' பேரா சிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன் 'கந்தன் அருள்', அம்பலவாணர் பாதை, திருநெல்வேலி. பல்துறை - 'புதிதாக சிந்திப்போம் சமுதாயத்திற் கான கல்வி', பேராசிரியர் மாரிமுத்து சின்னத் தம்பி, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு கொக்குவில். கவிதை - 'மழுங்கடிக்கப்பட்ட அடை யாளங்களும்', திருமதி செல்வமனோகரி சிவானந் தன் 133/15, கேணியடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். சிறுகதை - 'பிறந்து விட்ட புதுயுகத் தில்' சந்திரலட்சுமி தனபாலசிங்கம், சாயி இல்லம், மாப்பியன் மில்வீதி, சுதுமலை தெற்கு மானிப்பாய். சிறுகதை - 'உள்மனச் சித்திரம்' முத்துக்குமாரு இராதாகிருஸ்ணன், கலாசாலை அருகில், கோப்பாய தெற்கு கோப்பாய். நாவல் - 'சங்கு முள்ளு' எஸ்.உதயன், 8ஆம் வட்டாரம், பேசாலை. சிறுவர் இலக்கியம் - 'அன்புப் பிள்ளைகளே' (சிறுவர் பாடல்) பரராஜசிங்கம் சின்னத்தாய், புலோலி தெற்கு புலோலி. நாடகம் - 'அமைதிப்பூங்கா' ஜோசப் ஜோண்சன் ராஜ்குமார் 69/2 வேம்படி வீதி, யாழ்ப்பாணம். மொழி பெயர்ப்பு - 'Tamil Short Stories From Srilanka' கவிஞர் சோ.பத்ம நாதன் 'ஏரகம்' பொற்பதி வீதி, கொக்குவில்.

**வடக்கு மாகாண முதலமைச்சர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்- 2014**

மாரிமுத்து சீவரத்தினம், உடுவில். - நாடகம், வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை, கரைச்சி, - நாட கம். முடியப்பு அருட்பிரகாசம், யாழ்ப்பாணம், நாட்டுக்கூத்து. அருளானந்தம் செபமாலை, நானாட் டான். - நாட்டுக்கூத்து. செபமாலை பிலிப்பு நானாட்டான். - நாட்டுக் கூத்து.இன்னாசிமுத்து யேசு தாசன், சண்டிலிப்பாய் - நாட்டுக்கூத்து. சங்கரப் பின்னை புவனேஸ்வரன், நல்லூர் - இசை நாட கம். ஆறுமுகம் முருகுப்பிள்ளை, கரைத்துறைப் பற்று - நாட்டுக்கூத்து. அப்பாச்சி வல்லிபுரம், கரைச்சி - இசைநாடகம்.

முருகேசு செல்லத்துரை, கண்டாவளை - சிந்து நடைக்கூத்து.கருணாதேவி அற்புதராஜா, புதுக் குடியிருப்பு - இசைத்துறை. சின்னத்துரை மகேந்தி ரன், சங்கானை - வாத்திய இசை. லீலாம்பிகை செல்வராஜா, சண்டிலிப்பாய் - நடனம். அப்புத் துரை சென்செஸ்லோன் அரியநாயகம், நெடுந்தீவு - இலக்கியம். கனகரத்தினம் சட்டநாதன், நல்லூர் - இலக்கியம்.

ஆறுமுகம் கந்தவனம் கருணாகரன், கரவெட்டி - இசைத்துறை, திருமதி தமயந்தி சிவசுந்தரலிங் கம் வவுனியா - இலக்கியம். திருமதி கோகிலா தேவி மகேந்திரன், தெல்லிப்பளை - இலக்கியம். கந்தானகே சந்திரசேகர, வவுனியா - கைவினை. யோகலட்சுமி சோமசுந்தரம், வவுனியா - பல்துறை. முருகேசு சிவப்பிரகாசம், தெல்லிப்பளை - கிராமி யக்கலை. சின்னத்தம்பி அமரசிங்கம் - சங்கானை. - சிற்பம். ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ள னர்.

# மின் இணைப்பு

(மண்டைதீவு)

மண்டைதீவுப் பகுதியில் மின் இணைப்பு வழங்கப்படாத பகுதிகளுக்கு இலங்கை மின்சார சபையினரினால் மின் இணைப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மண்டைதீவின் பிரதான வீதியை அண்மையாக வைத்து ஏற்க னவே மின் இணைப்பு வேலைகள் இடம்பெற்று பொதுமக்களின் வீடுகளுக்கு மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு வேலைகளும் உள்ளடங்கியிருந்தது. இவ்வாறு மின் இணைப்பு வழங்கப்பட்ட வீதிகள் தவிர்ந்த ஏனைய வீதிகளுக்கும் மின் கம் பங்கள் நாட்டப்பட்டு அதனூடு மின்கம்பிகள் பொருத்தப்பட்டு மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. (பா)


**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக்**

**றீசைக்கிள் (மீள் சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன விலைக்கு வாங்கப் படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108 பலாலி வீதி யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.
(C/3800)


# பாகற்காய் கிலோ 250 ரூபா

யாழ்.குடாநாட்டில் நெல்லி யடி, அச்சுவேலி, சாவகச்சேரி, திருநெல்வேலி சந்தைகளில் தற் போது பாகற்காயின் விலை அதிகரித்துக் காணப்படுவதாக நுகர்வோரால் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அதாவது ஒரு கிலோ. பாகற் காய் 200 ரூபா முதல் 250 ரூபா வரை சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றது.

தற்போது கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாகியுள்ள நிலையில் ஏனைய மரக்கறிகள் சுமாரான விலையில் காணப்படுவதுடன், பாகற்காயின் விலை உயர்வ டைந்து காணப்படுவதாக தெரி விக்கப்படுகிறது. (85)

# இருவருக்கு டெங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலையில் நேற்றும் இருவர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரி வில் இருந்து ஒருவரும், யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவருமாக இவ் இருவரும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

இதேவேளை கடந்த சனி மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் பத்துப்பேர் இவ்வாறு சிகிச் சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (பா)


**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2575 திகதி 25-10-2014

ஆங்கில எழுத்து: Y

வெற்றி எண்கள்: 04 11 19 59

போனஸ் இல: 47

ஜக்பொட் பரிசு ரூ.14,270,750/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 200109 | 20/- | 4,002,180/- |
| 2 இல | 14331 | 100/- | 1,433,100/- |
| 3 இல | 282 | 1,000/- | 282,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7878 | 40/- | 315,120/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 535 | 1,000/- | 535,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,270,750/- | - |
| 1 இல + போனஸ் இல | 9494 | 100/- | 949,400/- |
| 2 இல + போனஸ் இல | 444 | 500/- | 222,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 360 | 200/- | 72,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 20 | 1,500/- | 30,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 233468 | | 9,340,800/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.10.29 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 14,816,775/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3531)


# 17 வயது சிறுமி துஷ்பிரயோகம் பெண்கள் அமைப்பினர் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தாரை கொலை செய்வோம் என மிரட்டி 17 வயது சிறுமியை துஷ் பிரயோகத்திற்குள்ளாக்கிய சம்பவம் கடந்த 22 ஆம் திகதி அரியாலை பூம்பு கார் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் பெண்கள் அமைப்பினர் இணைந்து நேற்று முறைப்பாடு பதிவு செய்துள் ளனர்.

அரியாலை முள்ளி வீதியைச் சேர்ந்த மேற்படி 17 வயது சிறுமி தனது சகோ தரியின் வீட்டிற்கு கடந்த தீபாவளி தினத்தன்று மாலை சென்றுள்ளார்.

இதன்போது, அங்கு வந்த 28 வயது டைய அதேயிடத்தைச் சேர்ந்த ஏற் கனவே திருமணமான நபர், சிறுமியின் சகோதரியை அடித்ததுடன், சிறுமியை அடித்து பூம்புகார் பகுதியிலுள்ள பற் றைக்குள் இழுத்துச் சென்று அவரை துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இது தொடர்பில் வெளியில் தெரிவித் தால் குடும்பத்தையே கொலை செய்வ தாக மிரட்டி சம்பவத்தை வெளியில் தெரியவராமல் தடுத்துள்ளார். மேலும் சிறுமியை கடத்திச் சென்று தனது தாய் வீட்டில் மறைத்து வைத்துள்ளார்.

இந்நிலையில், சிறுமியின் தாயார், தனது மகளை காணவில்லையென யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் 23 ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளார்.

தாயாரின் முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்ட பொலி ஸார், சிறுமியை மறைத்து வைத்திருந்த வீட்டிலிருந்து அச்சிறுமியை மீட்டு யாழ் ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட் படுத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார். இந்த சம்பவங்கள் தொடர்பில் யாழ் ப்பாண பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அபிவிருத்திக்கான கிராமங்களை இனம் காணும் கூட்டம்

பின்தங்கிய கிராமங்களுக்கு மேல திக அபிவிருத்திகளை முன்னெடுக்கும் முகமாக நாளை வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கிராமங்களை அபி விருத்திக்காக இனம் காணும் கூட்டம் இடம்பெறும்.

வலி.மேற்கு பிரதேச செயலர் அம்ப லவாணர் சோதிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வேள்ட் விசன் செயற்பாட்டு முகாமையாளர், வலி.மேற்கு வேள்ட் விசன் இணைப்பா ளர் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

வலி.மேற்கு பிரதேச சபை திட்டமி டல் அலுவலர்கள் மற்றும் வேலைப் பகுதி தொழில் நுட்ப அலுவலர்களை கலந்துகொள்ளுமாறு வேள்ட் விசன் நிறுவன அதிகாரி கேட்டுள்ளார்.

# யாழில் 650 வீதி மின்விளக்குகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை

## மக்கள் விசனம் தெரிவிப்பு

(அச்சுவேலி)

யாழ்.மாவட்டத்தில் பரவலாக 650 இற்கும் மேற்பட்ட வீதி விளக்குகள் ஒளிராமல் இருப்பதாகவும் இதனால் போக்குவரத்து நெருக்கடிகளும் சிரமங்களும் ஏற்படுவதாக பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதியிடம் உடனடி தீர்வாக யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள வீதிகளிலுள்ள மின்விளக்குகளை ஒளிரச் செய்யவேண்டும் என துறைசார்ந் தோரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி உடனடியாக தீர்வினை முன்வைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மின்விநியோகம் வழங்குமாறு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய கிளிநொச்சி மாவட்ட வீதி விளக்குகள் ஒளிர்கின்ற போதிலும் யாழ்.மாவட்ட வீதி விளக்குகள் இருவாரங்கள் கடந்த நிலையிலும் இன்னமும் ஒளிரவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் 650 இற்கும் மேற்பட்ட வீதி விளக்குகள் ஒளிரகாத்துக் கிடக்கின்றன என தெரிவிக்கும் பொதுமக்கள் இவ் வீதி விளக்குகளுக்கு ஒளியூட்ட உரிய தரப்பினர் நடவடிக்கை எடுப்பார்களா என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# சஞ்சிகை வெளியீடு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டு பேரவை யால் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் ஐப்பசி மாத வெளியீட்டு விழா எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் நூல் வெளியீட்டுரையை பத்மநாதன், மதிப்பீட்டுரையை சைவப்புலவர் க.நித்தியதசீதரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# பரிசளிப்பு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி எருதிட்டல் அ.த.க.பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை முதல்வர் ந.ஜெயரூபன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. சிவத்திரை சிவநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆரம்ப கல்வி ஆலோசகர் அ.மனோரஞ்சிதன், பாடசாலையின் பழைய மாணவனும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் புனர்வாழ்வு உத்தியோகத்தருமாகிய மு.கயோதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (90)

◆◆◆ ◆◆◆ ◆◆◆

(அச்சுவேலி)

அச்சுவேலி ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் திறந்த வெளி அரங்கில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வே.குணசீலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழையமாணவனும் வைத்தியகலாநிதியுமான மா.குழந்தைவேலு, சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சற்குணராசா, யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி பிரதீபா விபுலன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். கௌரவ விருந்தினராக அச்சுவேலி தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் தலைவர் து.ஆனந்தராசா கலந்து கொள்ளவுள்ளார். (48)

◆◆◆ ◆◆◆ ◆◆◆

(யாழ்.நிருபர்)

வட்டு இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு நாளும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் இரட்ணம் பௌண்டேசன் தலைவர் கலாநிதி. இ.நித்தியானந்தன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணக் கல்வியியற்கல்லூரி உபபீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணித மற்றும் புள்ளி விபரத்துறை சிரேஷ்ட கணித விரிவுரையாளர் கலாநிதி கா.கண்ணன் நினைவுப்பேருரை நிகழ்த்துவார். (10)



இலங்கைக்கு வருகைதந்துள்ள பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஸ்சர்மா நேற்று வடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு விஜயம் செய்த போது ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியைச் சந்தித்து கலந்துரையாடுவதைக் காணலாம்.
(படம்: பா.பார்த்தீபன்)

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் -17




தமிழர்கள் தங்கட அரசியலில் நிரந்தரமாகவே எதிரியை உருவகித்துக்கொண்ட பழியாலதான் எதிர்த்தரப்போட ஒரு போதும் கைகுலுக்கிக்கொள்ள முடியாமலிருக்கிறார்கள்.

அப்பிடிக் கைகுலுக்கினால் அது ஏதோ பெரிய துரோகம் எண்ட மாதிரிச் சிந்திக்கினம்.

தமிழ் மனசில தியாகி – துரோகி எண்ட பழமங்கள் வலுவாக ஊன்றிப்பட்டிருக்கின்றன. இந்த மாதிரியான கறுப்பு – வெள்ளை அடையாளப்படுத்தல் இன்றைய உலகத்துக்கு பொருத்தமானதே அல்ல.

இது முன்னொருகாலம் இருந்த வீரயுகத்துக்குப் பொருத்தமாக இருக்குமே தவிர, இன்றைய உலக யதார்த்தத்துக்குப் பொருத்தமாக இல்லை.

ஆனால் இந்தச் சிந்தனையை தமிழர்கள் விட்டுவிடுவதாக இல்லை. இது தமிழ் மனப்பாங்கிலயும் தமிழ்ப்பண்பாட்டிலயும் உள்ள ஒரு பெரிய பிரச்சினை.

தமிழர்கள் எண்டால் ஏதோ பென்னாம் பெரிய மானஸ்தர்கள் எண்டுதான் எப்பவும் தமிழர்கள் நினைச்சும் கதைச்சும் வந்ததால வந்த வினை.

அப்பிடியெண்டால், உலகத்தில உள்ள மற்ற இனங்களும் மற்றச் சமூகங்களும் மானம் இல்லாமலா வாழுகின்றன?

மற்றவையை விடத் தாங்கள் எப்பவும் உசத்தியானவர்கள் எண்ட வெங்காயத்தனமான எண்ணம்தான் தமிழற்றை கோவணத்தையே கிழிச்சது.

இப்ப இந்தக் கிழிஞ்ச கோவணத்தோட நிண்டுகொண்டுதான் இன்னும் பெரிய வீரக்கதைகளையும் மானக்கதைகளையும் பற்றிப் பீற்றிக் கொண்டிருக்கிறார்கள் பென்னாம் பெரிய தமிழர்கள்.

இப்பகூட, உலகம் முழுக்கத் தமிழர்கள் சிதறிப் பரந்து வாழுகிற போதும் தங்களை ஒருக்கால் திரும்பிப்பார்க்கவோ, தங்களை ஆராய்ஞ்சு பார்க்கவோ இவை ஆரும் விரும்பிறேல்ல. அதுக்கு இந்தத் தமிழ் மானம் எண்ட வெங்காய எண்ணம் விடாது.

அறப்படிச்சவையும் பென்னாம்பெரிய புத்திஜீவிகளும் சில முற்போக்காளர்களும் கூட இந்தத் தமிழ் மானம் எண்டதை விட்டு விலக முடியாமல் அதுக்குள்ள மயங்கிப்போய்க் கிடக்கினம்.

இந்தத் தமிழ்மானத்தைத்தான் இப்ப தமிழ்த்தேசியம் எண்டு உருப்போட்டு வைச்சிருக்கினம் எண்டது இன்னொரு விசேசமான சங்கதி.

அதாலதான் எதிர்த்தரப்போட எப்பிடி நடந்து கொள்ள வேணும்? அதை எப்பிடிக் கையாள வேணும்? அதற்கான தந்திரோபயங்கள் என்ன? நாம் கொண்டுள்ள மூலோபாயங்களை வெற்றியடைய வைப்பதற்கு எத்தகைய தந்திரோபாயங்களை என்ன வகையில் பாவிக்க வேணும்? எண்டதைப் பற்றியெல்லாம் தெரியாமல், அரசியலில் அரிவரியைக் கூடத் தெரியாமல் புலம்பிக்கொண்டிருக்கிறம்.

இதாலதான் நிரந்தர எதிரியோட எப்பிடிக் கைகுலுக்கிறது, எப்பிடி இணங்கிப் பேசிறது எண்டதைத் தெரியாமல் திகைச்சுப் போயிருக்கிறம்.

அரசியலில் கைகுலுக்கிக் கொள்வதொன்றும் இணைபிரிய மாட்டோம் எண்டு கட்டிப்பிடித்து காலம் முழுக்க இருக்கும் விசயமில்லை.

அரசியல்லை கைகுலுக்கிறதும் கை குடுக்கிறதும் மக்களுக்காக எண்டு நினைச்சம் எண்டால் அது ஒரு அவசியம் எண்டு விளங்கும்.

ஆனால், இந்த அவசியத்தைப் புரிஞ்சு கொள்ளாமலே தமிழற்றை காலம் போய்க்கொண்டிருக்கு.

இந்த இடத்தில ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறன்.

இலங்கைத் தமிழற்றை கடந்த அறுபது ஆண்டுகால அரசியல்ல கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் எண்ட மூண்டு காலத்துக்கும் இடையில ஏதாவது வேறுபாடு உண்டா?

அப்பிடி வேறுபாடு காண முடியாத நிலையிலதான் த்மிழர்கள் தங்கட அரசியலை வைச்சிருக்கினம்.

இதுக்குத்தான் எத்தினை ஆலாபனைகள். எத்தினை ஆய்வாளர்கள்? எத்தினை விதமான கட்டமைப்புகள்? எத்தனை வீரப்பேச்சுகள்! எவ்வளவு அறிக்கைகள்..... எத்தினை பிரகடனங்கள்..... எவ்வளவு சந்திப்புகள்? எவ்வளவு உலகப்பயணங்கள்.... அப்பப்பா....

கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்துக்கும் இடையில் நிச்சயமாக வேறுபாடு இருக்க வேணும். மாற்றங்கள் இருக்க வேணும். முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்க வேணும். அப்பிடியில்லை எண்டால்... அதன் அர்த்தம் என்ன?

தமிழற்றை அரசியல் பிரச்சினை இன்னும் இன்னும் சிக்கலாகி இருக்குதே தவிர, அது ஒரு படி கூட தீர்வை நோக்கி முன்னேறியதாக இல்லை.

தமிழ் மக்களுடைய வாழ்க்கை கூட பெரிய மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் கண்டதாகச் சொல்ல முடியாது.

அரசியல் சிந்தனையோ, பண்பாட்டுச் சிந்தனையோ பொருளாதாரச் சிந்தனையோ தமிழருக்கெண்டு குறிப்பிடக் கூடியமாதிரி இருப்பதாகத் தெரியவில்லை.

இதெல்லாத்துக்கும் பதிலாக வழமையான பாணியில் அரசாங்கத்தைத் திட்டுவதும் வெளியுலகத்தை – சர்வதேச சமூகம் எண்டு நாங்கள் நம்புகிற மேற்குலகத்தை யாசிக்கிறதும்தான் நடந்து கொண்டிருக்குது.

வழமையான அணுகுமுறைகள் எங்களை ஈடேற்றேல்லை, எங்களுக்கு எந்த நன்மைகளையும் தரேல்லை எண்டால்... நாங்கள் புதிய மாதிரியான முயற்சிகளை, புதிய வழிகளில் செய்ய வேணும் எண்டது ஏன் எங்கட புத்தியிலை உறைக்கேல்லை?

பணிவு என்பது தோரணங்களில் அல்ல. செயல்களில்தான் இருக்க வேண்டும். - ஆண்ட்ரூமேசன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கேள்விகள் கேட்காமல் வாழ்வில்லை!

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சின்னச் சின்ன மாற்றங்களினால் இன்றைய மனிதர்களாக உருவாகி வந்தவர்கள் நாம். மனிதன் தோன்றிய வரலாற்றில் உழைப்புக்கு பெரும் பாத்திரம் இருக்கிறது.

நான்கு கால்களால் நடந்து கொண்டிருந்த மனிதக்குரங்குகள் கைகளை உயர்த்தி விரல்களைப் பயன்படுத்த ஆரம்பித்த போது மூளையின் வளர்ச்சியில் ஒரு பெரும்பாய்ச்சல் நிகழ்ந்தது என்று படித்திருக்கிறோம்.

அதுபோலவே நமது வளர்ச்சியில் நடந்துவந்த ஒவ்வொரு மாற்றத்துக்கும் பின்னால் ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகள் இருந்திருக்கிறது.

இந்தக் கேள்விகள் தான் இன்று மனிதகுலம் அறிவியல், இலக்கியம், கலை, தத்துவம், அரசியல், தொழில்நுட்பம் என்று சகலவிதமான துறைகளிலும் பிரம்மாண்டமான வளர்ச்சியடைய அடிப்படைக் காரணம்.

சமூக மாற்றங்களைத் தூண்டியதும், மாற்றங்களைக் கொண்டு வந்ததும் இந்தக் கேள்விகள் தான். இந்த உலகத்தைப் புரிந்து கொள்ளும் முயற்சியிலேயே கேள்விகள் பிறக்கின்றன.

அநேகமாக மூன்று வயதிலிருந்தே குழந்தைகள் கேள்விகள் கேட்க ஆரம்பித்து விடுகிறார்கள். முதலில் தாயிடம், தந்தையிடம், பின்னர் எல்லோரிடமும் கேள்விகள் கேட்கத் தொடங்குகிறார்கள். அது என்ன? இது என்ன? என்று கேள்விகளால் திணறடிக்கிறார்கள் குழந்தைகள்.

பெற்றோர் முதலில் நம்முடைய குழந்தை இப்படிக் கேள்வி கேட்கிறதே என்று ஆனந்தப் படுகிறார்கள். பெரிய அறிவாளியாய் வருவான் என்று தங்களிடையேயும் பிறகு மற்றவர்களிடமும் சொல்லி மகிழ்கிறார்கள்.

ஆனால் கேள்விகள் அதிகரித்துப் பதில் சொல்லத் திணறும் போது அல்லது தெரியாமல் போகும்போது சலிப்புற்று குழந்தைகளைத் திட்டவும் செய்வார்கள். பெரியவர்களின் அறியாமையை குழந்தைகள் அறிந்து கொள்ளக் கூடாது என்று வரட்டுக் கௌரவம் தான் காரணம்.

அடுத்து ஆரம்பப் பள்ளிகள். எப்போதும் ஓட்டமும் விளையாட்டும் கேள்விகளுமாய் இருக்கிற குழந்தைகளை ஒழுங்குபடுத்துதல் பேரில் அடக்கி ஒடுக்கி உட்காரவைத்து விடுவார்கள்.

அதில் இருண்டு ஒளியிழந்து போகிற குழந்தைகள் கடைசி வரை அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதில்லை. போகப்போக தண்டனைகளாலும், ஆசிரியர்கள் சொல்லித் தருவதைத் திரும்பச் சொல்கிற கிளிப்பிள்ளைகளாகவும் வளர்க்கப்படும் அவர்களுக்குப் பள்ளிக்கூடம் என்றாலே பயந்து நடுங்குகிற அளவுக்கு நம்முடைய கல்வி முறையும் அமைந்துள்ளது.

கல்வி மனப்பாடக்கல்வியாக, பரீட்சைகள், புள்ளிகள் மூலமாக ஒரு குழந்தையின் திறமையைத் தீர்மானிக்கிற கல்வியாக இருக்கிறது.

குழந்தைகள் கேள்விகள் கேட்பதை ஆசிரியர்கள் விரும்புவதில்லை. அவர்கள் சொல்லிக் கொடுப்பதை, அல்லது புத்தகத்தில் உள்ளதை அப்படியே சொல்பவன் அல்லது எழுதுபவன் சிறந்த மாணவன் / மாணவி.

கேள்விகள் கேட்க விருப்பப்படாத ஒரு சமூகமாகவே நாம் வளர்கிறோம். பழகிய பாதையில், பழைய அதே சிந்தனைகளில், மாற்றங்களை யோசிக்காத ஒரே போக்கிலேயே சென்று கொண்டிருக்கிறோம்.

அதனாலேயே நமது இன்றைய வாழ்வையும் நல்லபடியாக மாற்றிக்கொள்ள முடியாமல் தொடர்ந்து வதங்குகிறோம்.

நமக்கு முன்னால் வீசப்பட்டுக் கொண்டிருக்கும் ரோசங்கள், வீரங்கள், ஆண்டபரம்பரைப் பெருமிதங்கள், அப்புக்காத்து வாதங்கள், வெறுப்புகள், தொடர்ந்து பகையேற்றும் ஆவேசங்கள், வாய்ச்சவடால்கள் எல்லாவற்றையும் நிறுத்தி, நடக்கக் கூடியது என்ன என்ற நிலையிலிருந்து அதற்கான கேள்விகளைக் கேட்காமல் நமக்கு விடுதலையுமில்லை; ஒளிமிக்க வாழ்வுமில்லை என்பதைப் புரிந்துகொள்வோம்.

- ஆசிரியர்

# வரவு-செலவுத் திட்டத்தால் அரச ஊழியர்கள் ஏமாற்றம்

## ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் குற்றச்சாட்டு

வரவு செலவுத்திட்டம் அரச ஊழியர்களுக்கு ஏமாற்றமளித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர் உட்பட அரச ஊழியர்கள் 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பையே எதிர்பார்த்து கோரிக்கை விடுத்தனர். ஆனால் அரசாங்கம் இந்த வரவு-செலவுத்திட்டத்தில் 2200 ரூபாவை மாத்திரமே சம்பள உயர்வாக வழங்கியுள்ளது.

இதேவேளை, ஆசிரியர்களுக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் எந்த அடிப்படையில் வழங்கப்படவுள்ளதென தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை.

50 ஆயிரம் ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்படுவதாக வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை முறையாக போட்டிப் பரீட்சையின் மூலம் ஆசிரியர் வேலையில் இணைத்துக் கொண்டு 15 ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளமாக வழங்க வேண்டுமென்பதே எமது கோரிக்கையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

# வருடாந்த பரிசளிப்பு விழா

நவாலி சென்.பீற்றர் றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 10.00 மணிக்கு இடம்பெறும்.

பாடசாலை அதிபர் க.ஸ்ரீநந்தகோபன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வுக்கு பிரதம அதிகாரியாக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக வலய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சியானந்தராஜாவும் கலந்து சிறப்பிப்பார்.

அருளுரைகளை அருட்தந்தை ஜெ.ஜோதிநாதன், நவாலி அந்திரான் பிரதம குருசிவஸ்ரீ சுந்தர தியாகராஜ குருக்கள் ஆகியோர் வழங்குவர். வரவேற்புரையை சிரேஷ்ட ஆசிரியை திருமதி செந்தினி தருமசீலன் வழங்குவார்.

ஆசியுரையினை ஆறு.திருமுருகனும், வாழ்த்துரைகளை முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி.றெஜினா இருதயநாதன், இணுவையூர் வி.கே.குகானந்தன் ஆகியோர் வழங்குவர்.

# யாருக்கும் விருப்பமில்லாத தேர்தல் அபாயகரமானதாகவே இருக்கும்

## இது மங்களவின் கணிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மிகவும் அபாயகரமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சுதந்திரத்தின் பின்னர் நடைபெறும் மிகவும் மோசமான தேர்தலாகவே இதனை குறிப்பிட வேண்டும்.அவசர அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை நடாத்துமாறு நாம் கோரவில்லை. அரசாங்கமே அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை நடாத்த முயற்சிக்கின்றது.

மக்கள் அரசாங்கத்தை நிராகரித்து வருகின்றமையை உணர்ந்து கொண்டதனால் இவ்வாறு முன்கூட்டியே தேர்தல் நடத்தப்படுகின்றது.

நீண்ட காலம் எதிர்க்கட்சியாகவே இருக்கும் போது சில முரண்பாடுகள் ஏற்படும் என்பதனை மறுப்பதற்கில்லை. அதன் காரணமாகவே கட்சி மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி வெற்றியீட்டக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்துள்ளன.

இந்த நாட்டைச் சேர்ந்த கட்சி என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உதாசீனம் செய்ய முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும். இந்தத் தேர்தலில் சுலபமாக வெற்றியீட்ட முடியாது, ராஜபக்ஷ அரசாங்கத்துடன் கடுமையாக மோதியே வெற்றியீட்ட நேரிடும். நாட்டைப் பாதுகாக்கவும் பௌதீக ஒருமைப்பாட்டை உறுதி செய்யவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியம் என்ற பிழையான நிலைப்பாடு காணப்படுகின்றது. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது, நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாகவே தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்பதற்கில்லை.

மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தினால் தீர்வுத் திட்டங்களை வழங்க முடியவில்லை. சர்வதேச அழுத்தங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. எனவே இம்முறை தேர்தலில் ஜனாதிபதியினால் வெற்றியீட்டக் கூடிய சாத்தியம் கிடையாது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு சிறுபான்மை கட்சிகளின் ஆதரவும் கிடைக்கப் பெற்றுள்ளது என மங்கள சமரவீர சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

# முடிவுக்கு வருகிறது ஐ.நா.விசாரணைக்காலம்

வடக்கில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின் போது நிகழ்ந்தன என்று கூறப்படும் மனிதகுலத்திற்கு எதிரான கொடூரங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஐ.நா. விசாரணைக் குழுவிற்கு சாட்சியங்களை கையளிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் இந்த வாரத்துடன் நிறைவடைகிறது. 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி முதல் 2011 நவம்பர் 15 ஆம் திகதி வரை இலங்கையில் இடம்பெற்ற மிகவும் மோசமான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் ஏனைய கொடூரங்கள் தொடர்பில் சாட்சியங்களை சமர்ப்பிப்பதற்காக தனிநபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் எதிர்வரும் வியாழக்கிழமை ஜெனிவா நேரப்படி நள்ளிரவுடன் நிறைவு பெறுகின்றது.

இதற்கமைய இறுதி விசாரணை அறிக்கையை தயாரிப்பதற்கு முன்னதாக கிடைக்கப் பெற்ற சாட்சியங்களை விரிவாக அலசி ஆராய்வதற்கான கால அவகாசம் விசாரணைக் குழுவிற்கு கிடைக்கும் என்று ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அடுத்த ஆண்டு மார்ச் மாதக் கூட்டத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்த இறுதி அறிக்கை பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# வடக்கு விவசாயிகளுக்கு கடன் வணிக வங்கிகள் தயார்

(யாழ்.நிருபர்)

இவ்வருடம் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் வடபகுதி விவசாயிகளுக்கு 2014/2015 பெரும்போக பயிர்ச்செய்கைக் கடன்களை வழங்குவதற்கு வணிக வங்கிகள் முன்வந்துள்ளன.

நெல், மிளகாய், வெங்காயம், தானியவகைகள், கிழங்கு வகைகள், மரக்கறிகள், இஞ்சி போன்ற பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் இக்கடனைப் பெறமுடியும்.

இக்கடனுக்காக கடந்த காலங்களில் 8 வீத வட்டி அறவிடப்பட்டு வந்தது. இவ்வாண்டு வட்டி வீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது வருடத்திற்கு 7 வீதம் மட்டுமே வட்டியாக அறவிடப்படுகிறது. இலங்கைவங்கி, மக்கள் வங்கி உட்பட அனைத்து வணிக வங்கிகளிலும் விவசாயிகள் இக்கடனைப் பெறமுடியும். (10)

# தமிழ்த்திரையுலகின் சாதனையாளர் எஸ்.எஸ்.ராஜேந்திரன்





**சி.ரமேஷ்**

**எஸ்.எஸ்.ஆர்.** அல்லது எஸ்.எஸ்.ராஜேந்திரன் என அழைக்கப்படும் சேடப்பட்டி சூரியநாராயண தேவர் ராஜேந்திரன் 24.10.2014 அன்று காலை தம் எண்பத்தாறாவது வயதில் காலமானார். இவர் நுரையீரல் தொற்று நோயால் அவதிப்பட்டு வந்தார். சிகிச்சைக்காக மருத்துவ மனை யில் அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த வெள்ளியன்று சிகிச்சை பலனின்றி அவரது உயிர் பிரிந்தது.

தன் குணச்சித்திர நடிப்பாலும் உணர்வுபூர்வமான வசனங்களாலும் 1950கள், 60களில் தமிழ்த் திரையுலகில் புகழ்பெற்று விளங்கிய எஸ்.எஸ்.ஆர். 1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்துக்கு திமுக சார்பில் தேனி தொகுதியில் போட்டியிட்டு சட்ட மன்ற உறுப்பினராகவும் விளங்கியவர்.

இந்திய நடிகர்களில் முதன் முதலாக எம்.எல்.ஏ. ஆன எஸ்.எஸ். ராஜேந்திரன் பின்னர் மேல்சபை எம்.பியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பிறகு அ.தி.மு.க.வில் இணைந்து 1981இல் ஆண்டிப்பட்டி தொகுதியில் போட்டியிட்டு வென்றார்.

மதுரை மாவட்டத்திலுள்ள சேடப்பட்டி கிராமத்தில் சூரியநாராயண தேவருக்கும் ஆதிலட்சுமிக்கும் மகனாக 1928ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிறந்தார். தந்தை கல்வி அதிகாரியாக பதவி வகித்தவர். எஸ்.எஸ். ஆருக்கு பாப்பம்மாள் என்ற ஒரு சகோதரியும் உண்டு.

1937இல் எம்.கே.தியாகராஜ பாகவதர் நடித்த "சிந்தாமணி" கதையை தம் பாடசாலையில் நாடகமாகப் போட்டு அதில் கதாநாயகனாக நடித்த எஸ்.எஸ். ஆர். அந்நாடகத்துக்கான முதல் பரிசையும் பெற்றுக் கொண்டார். அதன் பின் டி.கே.எஸ். நாடக சபாவில் சேர்ந்தார். அங்கு "சிவ லீலா" நாடகத்தில் காவலாளி வேடமே கிடைத்தது.

இக்காலகட்டத்தில் தந்தை பெரியாருடனும், அறிஞர் அண்ணாவுடனும் பழகும் வாய்ப்பு எஸ்.எஸ்.ராஜேந்திரனுக்கு கிடைத்தது.

"இன்ப உலகிலே மன்மதன் பூங்கணை" என்ற பாடலை "ஆண்டாள்" படத்திற்காகப் பாடிய ராஜேந்திரன் 1947 ஆம் ஆண்டில் பைத்தியக்காரன் என்ற திரைப்படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானார். 1952-ம் ஆண்டு மு.கருணாநிதி திரைக்கதைவசனத்தில் வெளிவந்த "பராசக்தி" படத்தில் சிவாஜிகணேசனின் அண்ணனாக "ஞானசேகரன்" என்ற வேடத்தில் எஸ்.எஸ்.ஆர். சிறப்பாக வசனம் பேசி நடித்தார். "பராசக்தி", தமிழ்ப் பட உலகில் மறுமலர்ச்சி ஏற்படச் செய்ததுடன், அதில் நடித்த அனைவருடைய வாழ்க்கையிலும் திருப்பத்தை ஏற்படுத்தியது.

1954இல் பீம்சிங் இயக்கத்தில் வெளியான அம்மையப்பன் திரைப்படத்தில் ஜி.சகுந்தலாவுடன் கதாநாயகனாக நடித்தார். கதை கலைஞர் கருணாநிதி, இசை டி.ஆர். பாப்பா. படம் பெரிதாக வெற்றி பெறவில்லை.

அதன் பின்னர் சிறு பாத்திரங்களில் நடித்து வந்தவருக்கு 1957 ஆம் ஆண்டில் வெளிவந்த முதலாளி திரைப்படம் திருப்புமுனையாக அமைந்தது; எஸ்.எஸ்.ராஜேந்திரனுக்கு நட்சத்திர அந்தஸ்தையும் பெற்றுக் கொடுத்தது.

இப்படத்தில் டி.எம். சௌந்தரராஜனால் ஆரபி ராகத்தில் பாடப்பெற்ற ஏரிக்கரை மீது போறவளே பெண்மயிலே.. பாடல் பெரும் வரவேற்பைப் பெற்றது. கவி கா.மு.ஷெரீப் வரிகளுக்கு கே.வி. மகாதேவன் இசையமைத்திருந்தார். இதுவே நடிகை தேவிகாவின் முதல் திரைப்படமும் ஆகும்.

1954இல் எம்.ஆர்.ராதா வுடன் நடித்த ரத்தக்கண்ணீர் எஸ்.எஸ்.ஆரின் இயல்பான நடிப்பை வெளிப்படுத்தி நின்றது.

முரசொலி மாறன் திரைக்கதை வசனத்தில், கிருஷ்ணன்-பஞ்சுவின் இயக்கத்தில், ஏவி.எம். தயாரித்த "குல தெய்வம்"" (1956) படமும் எஸ்.எஸ். ஆரின் நடிப்பின் சிறப்பைக் காட்டியது. பிரபாவதி தேவி சரஸ்வதி எழுதிய வங்காளக் கதையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இப்படம் இந்து விதவைகளின் மறுமணத்தை வலியுறுத்தியது.

1958-இல் பிரேம்நசீருடன் இணைந்து நடித்த "தை பிறந்தால் வழி பிறக்கும்" எஸ்.எஸ்.ஆரின் வெற்றிப்படங்களில் ஒன்று. "தை பிறந்தால் வழி பிறக்கும் தங்கமே தங்கம்", "அமுதும் தேனும் எதற்கு", "எலியோரை தாழ்த்தி", "மண்ணுக்கு மரம் பாரமா" "ஆசையே அலைபோல" முதலான அனைத்துப் பாடல்களும் ஹிட் ஆயின. மருதகாசி, கண்ணதாசன், சுரதா, கு.சா.கிருஷ்ண மூர்த்தி, முத்துசாமி ஆகியோர் எழுதிய பாடல்களுக்கு இசை அமைத்தவர் கே.வி. மகாதேவன்.

1962 ஆம் ஆண்டு வெளிவந்த சாரதா திரைப்படம் எஸ்.எஸ்.ஆரின் நடிப்பிற்கு தீனி போட்டது. காலத்தால் அழியாத மிகச் சிறந்த பாடல்களை கே.வி. மகா தேவன் இத்திரைப்படத்துக்கு அளித்திருந்தார். மெல்ல மெல்ல அருகில் வந்து... காதல் என்பது எதுவரை... முதலான பாடல்கள் இன்று வரை நெஞ்சில் நிலைத்திருப்பவை.

இப்படத்துக்குப் பின் எஸ்.எஸ்.ஆர் விஜயகுமாரி ஜோடி பெரிதும் பேசப் பட்டது. 1942இல் சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு, ப.நீல கண்டன் இயக்கிய கண்ணகி படத்தைத் தொடர்ந்து 1964இல் வெளிவந்த படமே பூம்புகார். கண்ணகி படத்தில் கண்ணகியாக நடித்த விஜயகுமாரியே இத்திரைப்படத்தில் கண்ணகியாக தோன்ற கோவலனாக எஸ்.எஸ். ராஜேந்திரன், மாதவியாக ராஜஸ்ரீ, கவுந்தி அடிகளாக கே.பி. சுந்தராம்பாள் ஆகியோர் நடித்திருந்தனர்.

மு.கருணாநிதி வசனம் எழுத ஆர். சுதர்சனம் இசையமைத்திருந்தார். இத்திரைப்படம் இன்று வரை எஸ்எஸ்.ஆரின் பெயர் சொல்லும் படமாக விளங்குகிறது.

நானும் ஒரு பெண், கைகொடுத்த தெய்வம், பூம்புகார், சாரதா போன்ற திரைப்படங்களில் இவருடன் இணைந்து நடித்த விஜயகுமாரியைத் திருமணம் செய்துகொண்டார். ஏற்கனவே இரண்டு முறை திருமணமாகியுள்ள நிலையில் விஜயகுமாரியை மறுமணம் செய்த எஸ்.எஸ்.ஆருக்கு அவர் மூலமாக ஆண் குழந்தையொன்று பிறந்த நிலையில் அவரை விட்டுப் பிரிந்தார்.

விஜயகுமாரியை திருமணம் செய்ய முன்னர் 1946-ம் ஆண்டு, தனது நாடகத்தில் உடன் நடித்த கேரளாவைச் சேர்ந்த பங்கஜத்தை கலப்புத் திருமணம் செய்து கொண்டார். அதே நாளில் எஸ்.எஸ்.ஆரின் தங்கை பாப்பம்மாளுக்கும், "நடிகமணி" டி.வி. நாராயணசாமிக்கும் திருமணம் நடந்தது. இந்தத் திருமணங்கள் அண்ணா தலைமையில், பாரதிதாசன் முன்னிலையில் நடந்தன.

முதல் மனைவி பங்கஜம் மறைவுக்குப் பிறகு 1974-ம் ஆண்டு தாமரைச் செல்வியை எஸ்.எஸ்.ஆர். திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு லட்சுமி என்ற மகளும், மருதுபாண்டியன் என்கிற கண்ணன் என்ற மகனும் உள்ளனர்.

பராசக்தி, ஆலயமணி, பார் மகளே பார், குங்குமம், பச்சைவிளக்கு, கைகொடுத்த தெய்வம், பணம், மனோகரா, ரங்கூன் ராதா, தெய்வப்பிறவி, பச்சைவிளக்கு, பழனி, சாந்தி,எதிரொலி முதலான திரைப்படங்களில் சிவாஜி கணேசனுடன் இணைந்து நடித்தார். சிவாஜி கணேசன் தன் மிகை நடிப்பால் புகழ்பெற்ற காலத்தில் தன் இயல்பான நடிப்பினாலுாக புகழ் பெற்று விளங்கினார் எஸ்.எஸ்.ராஜேந்திரன்.

எம்.ஜி.ஆருடன் சிறந்த நட்பினைப் பேணி வந்த எஸ்.எஸ்.ஆர். எம்.ஜி.ஆர். இரண்டு வேடங்களில் தோன்றி நடித்த ராஜா தேசிங்கு (1960), காஞ்சித் தலைவன் முதலான படங்களிலும் முக்கிய வேடங்களில் நடித்தார். "காக்கும் கரங்கள்"" படத்தில் டாக்டர் வேடத்தில் சிறப்பாக நடித்ததைப் பார்த்த அண்ணாத்துரை, ராஜேந்திரனின் வீட்டுக்குச் சென்று பாராட்டினார்.

பிள்ளைக்கனியமுது, பெற்ற மகனை விற்ற அன்னை, திருடர்கள் ஜாக்கிரதை, தேடிவந்த செல்வம், அன்பு எங்கே, சிவ கங்கைச் சீமை, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை, மாமியார் மெச்சிய மருமகள், கல்யாணிக்கு கல்யாணம், தலை கொடுத்தான் தம்பி, புதுமைப்பெண், பிரசிடெண்ட் பஞ்சாட்சரம், நாட்டுக்கொரு நல்லவன், அல்லி பெற்ற பிள்ளை, ஓடிவிளையாடு பாப்பா, சங்கிலித்தேவன் என தொடர்ந்து பல படங்களில் நடித்தார்.

படங்கள் தயாரிக்க முடிவு செய்து, "எஸ்.எஸ்.ஆர். பிக்சர்ஸ்"" என்ற படக்கம்பெனியை தொடங்கினார். "தங்கரத்தினம்"" என்ற படத்தை தயாரித்துடன் கதாநாயகனாக நடித்து அவரே இயக்கவும் செய்தார். இந்தப் படத்தில் தான், முதன் முதலில் தி.மு.கழகக் கொடி காண்பிக்கப்பட்டது. சாதி ஒழிப்பை மையமாக வைத்து எடுக்கப் பட்ட இந்தப் படத்தில் எஸ்.எஸ்.ஆர். எழுதிய "துன்பம் தீராதோ, துயரம் மாறாதோ"" என்ற பாடலும் இடம் பெற்றது. படமும் வெற்றிப்படமானது.

படத்தில் நடித்துக்கொண்டிருந்த போதே தனது நாடக மன்றத்தின் மூலம் அண்ணாவின் "ஓர் இரவு", "சந்திரமோகன்"", மு.கருணாநிதி எழுதிய "அம்மையப்பன்"" ஆகிய நாடகங்களையும் நடத்தினார். எம். என். ராஜம், முத்துராமன், மனோரமா ஆகியோரை அழைத்து வந்து தனது நாடகங்களில் நடிக்க வைத்தார். பின்னர் இவர்கள் திரைப்படத் துறையில் வெற்றி பெற்றார்கள்.

எஸ்.எஸ்.ராஜேந்திரன், புராணப்படங்களில் நடிக்க மறுத்தமையால் இலட்சிய நடிகர் என்று பெயர் பெற்றார். "நான் 8 வயதில் இருந்தே கோவிலுக்குச் செல்வது இல்லை. பெரியாரின் கொள்கையில் ஈடுபாடு இருந்ததால், புராணப்படங்களில் நடிக்கவில்லை. புராணப் படங்களில் நடிப்பதற்கு பலர் அழைத்தார்கள். சம்பூர்ண ராமாயணம் படத்தில், பரதனாக நடிக்க முதலில் என்னைத்தான் அழைத்தார்கள். பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை முழுமையாக ஏற்றுக்கொண்ட காரணத்தால், புராணப் படங்களில் நடிக்க மறுத்து விட்டேன். என் கொள்கைக்கு முரணான எந்தப் படத்திலும் நான் நடித்தது இல்லை..." என்பது அவர் கூறியது.

எஸ்.வி.சகஸ்ரநாமம், சித்தூர் வி. நாகையா, முத்துராமன், நாகேஸ்வரராவ், எஸ்.வி.சுப்பையா போன்ற ஒரு சிலரே தமிழ்த் திரையுலகில் தம் இயல்பான நடிப்பால் சாதித்தவர்கள். அவர்களுடன் இணைத்து நோக்கப்பட வேண்டியவர்களில் எஸ்.எஸ். ராஜேந்திரனும் ஒருவராவார்.

**"நான் 8 வயதில் இருந்தே கோவிலுக்குச் செல்வது இல்லை. பெரியாரின் கொள்கையில் ஈடுபாடு இருந்ததால், புராணப்படங்களில் நடிக்கவில்லை. புராணப் படங்களில் நடிப்பதற்கு பலர் அழைத்தார்கள். சம்பூர்ண ராமாயணம் படத்தில், பரதனாக நடிக்க முதலில் என்னைத்தான் அழைத்தார்கள். பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை முழுமையாக ஏற்றுக்கொண்ட காரணத்தால், புராணப் படங்களில் நடிக்க மறுத்துவிட்டேன். என் கொள்கைக்கு முரணான எந்தப் படத்திலும் நான் நடித்தது இல்லை..."**

# இணைந்து பணியாற்ற அரசு தயார்
## ஐ.நா.வுக்கு பதிலளிக்கிறார் ஜி.எல்.



(கொழும்பு)
ஐக்கிய நாடுகள் அமைப்புடன் ஆக்கபூர்வமான வகையில் இணைந்து செயற்படத் தயார் என இலங்கை அரசாங்கம் இப்போது அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பொறிமுறையுடன் இணைந்து செயற்பட விரும்புவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீஎல்பீரிஸ் குறிப்பிட்டுள்ளார் எனினும் அனைவரதும் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய வகையில் ஐ.நா. செயற்படத் தவறக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின முக்கியத்துவத்தை இலங்கை உணர்ந்து கொண்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் தொடர்ச்சியாக இணைந்து செயற்பட விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு பதிலீடான அமைப்பு கிடையாது, அமைப்பின் பணிகளை வேறு எவரினாலும் மேற்கொள்ளவும் முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒரு சில தரப்பினரின் நடவடிக்கைகள் குறித்து விமர்சனங்கள் காணப்பட்ட போதிலும் ஒட்டு மொத்தத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் நடவடிக்கைகள் முக்கியமானவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

1951 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இலங்கை சிறந்த முறையில் இணைந்து செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொறிமுறைமை தெரிவுகளின் அடிப்படையில் அமைந்துவிடக் கூடாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அனைவரினதும் நம்பகத் தன்மையை வென்றெடுக்கக் கூடிய வகையில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயற்பாடுகள் அமைய வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மண்சரிவு அபாயம் பதுளையில் நீடிப்பு

(கொழும்பு)
பதுளை மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் மண் சரிவுகள் ஏற்படுவதற்கான அபாயம் இருப்பதாக பதுளை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பதுளை மாவட்டத்தில் ஒரு மணிநேரத்துக்குள் 75 மில்லி மீற்றர் மழை பெய்ததையடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எல்லே - பண்டாரவளை, வெலிமடை, பதுளை மற்றும் ஹல்துமுல்லை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கே இந்த அனர்த்தம் விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மழை பெய்யுமாக இருந்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் மணிசரிவு ஏற்படும் என்றும் அந்நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

# சீன இராணுவ நிபுணர்கள் கொழும்பில் கடற்பாதுகாப்பு குறித்து ஆராய்வு



ஆறுபேர் கொண்ட சீனாவின் இராணுவ விஞ்ஞானப் பிரதிநிதிகள் சீன மக்களின் இராணுவ அறிவியல் நிறுவகத்தின் துணைவேந்தர் இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் லியர் னோனன்ற் தலைமையிலான குழு இலங்கை கடற்படை தலைமையகத்தில் கடற்படை அதிகாரி அட்மிரல் ஜயந்த பெரேராவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துள்ளனர்.

இருநாட்டு வியபார முக்கியத்துவங்கள் மற்றும் விருப்பங்கள் தொடர்பாக இரு நாட்டு இராணுவ தலைமைகளும் கலந்துரையாடினர். கலந்துரையாடலைத் தொடர்ந்து இருவருக்குமிடையில் நினைவுச்சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இலங்கை கடற்படை ரியர் அட்மிரல் பணிப்பாளர் நாயகம் நியல் ரொசைறோ அவர்களால் தயார் செய்யப்பட்ட "கடல் அளவுகள் பாதுகாப்பு சூழ்நிலை தொடர்பான கடல் பாதுகாப்பை ஊக்குவிப்பது" தொடர்பான விவரண தயார்படுத்தலொன்றும் வழங்கப்பட்டது.

# வடக்கு பயணஅனுமதி; மேற்கு நாடுகள் கண்டனம்

வெளிநாட்டுப் பிரஜைகள் வடக்கு மாகாணத்திற்கு பயணம் செய்வது தொடர்பில் காணப்படும் கட்டுப்பாடுகள் குறித்து பல நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்ரேலியா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்டவை இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளன

இலங்கை விஜயம் தொடர்பில் பல நாடுகள் தமது நாட்டுப் பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்துள்ளன. அத்தியாவசியமில்லை என்றால் இலங்கையின் சில பகுதிகளுக்கான விஜயங்களை தவிர்த்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கிற்கு பயணம் செய்யும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு உடையவர்கள் முன்கூட்டியே அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற பாதுகாப்பு அமைச்சின் நிபந்தனை குறித்து பல நாடுகள் தமது நாட்டு பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

இலங்கைக்கான பயணங்களின்போது குறிப்பாக நாட்டின் ஒரு சில பகுதிகளுக்கான பயணங்களின் போது எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியது அவசியமாகின்றது என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டவர் வடக்கு விஜயம் பொறிமுறையில் தளர்வு

இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கு வரும் வெளி நாட்டவர்களுக்கு விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாட்டில் இலங்கையில் பிறந்தவர்களுக்கு மாத்திரம் சலுகை அளிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இலங்கையில் பிறந்து வெளிநாடுகளில் வசிப்போர் தமது உறவினரைப் பார்க்கவோ அல்லது அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவோ வடக்குக்கு தடையின்றி செல்ல முடியும். அவர்கள் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப்பெற வேண்டியதில்லை.

ஆனால் இலங்கையில் பிறக்காதவர்கள் கட்டாயம் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றே வடக்குக்குப் பயணிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி மகிந்தவுடன் கிராம அலுவலர்கள் சந்திப்பு



சப்ரகமுவ மேற்கு மற்றும் வடமேல் மாகாண கிராம சேவையாளர்களை நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்து கலந்துரையாடினார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது அகில இலங்கை கிராமசேவகர் சங்கத்தினால் ஜனாதிபதிக்கு நினைவுச்சின்னமொன்று வழங்கப்பட்டது. இச்சந்திப்பின் போது அமைச்சர் டப்ளியு. ஜி.ஏ. செனவிரத்ன, பிரதி அமைச்சர் விஜய தஹநாயக்க, மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, வடமேல் மாகாண முதலமைச்சர் மகிபால ஹேரத் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி.பி.அபே கோன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சீனாவின் நீர்மூழ்கி கொழும்பில் தரித்தது ஏன்?
## டில்லியின் கவனம் திரும்புகிறது

இலங்கையில் சீனாவின் இராணுவ பிரசன்னம் அதிகரித்து வருகின்றமை குறித்து இந்தியா தனது கவலையை வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் கோதாபய ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போது இந்த விடயமே முக்கியமாக வலியுறுத்தப்பட்டது. இதனை மையமாகக் கொண்டே இந்த விஜயத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் அருண்ஜெட்லிக்கும் - கோதா பயவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புகளின் போது இந்த விடயம் அதிகளவு வலியுறுத்தப்பட்டதாம்.

சீனாவின் நீர்மூழ்கி கப்பல் இலங்கைக்கு கடந்த மாதம் வந்தமை குறித்த இந்தியாவின் கரிசனைகளை தெரிவிக்கவே இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இது இந்தியாவின் பாதுகாப்பிற்கு கவலையளிக்கும் விடயம் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் நற்பெயரை தக்க வைக்க உலகம் தழுவிய பொறிமுறை
## அதிக செலவில் அமுலாகிறது

நாட்டின் நன்மதிப்பை மேம்படுத்திக்கொள்ளும் நோக்கில் பல மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டு வருவதாக பிரித்தானியை மையமாகக் கொண்டு இயங்கி வரும் தி இன்டிபென்டன் என்ற இணையதளம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையினால் இலங்கை தொடர்பில் நடத்தப்பட்டு வரும் விசாரணை குறித்த அறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இந்த நிலையில் சர்வதேச அரங்கில் நாட்டின் நன்மதிப்பை மேம்படுத்தி தக்க வைத்துக் கொள்ள அரசாங்கம் பெருமளவு பணத்தை செலவிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் தொடர்பு நிறுவனங்களுக்கு பணம் கொடுத்து நாடு தொடாபில் நன்மதிப்பை ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவில் இயங்கி வரும பல நிறுவனங்களுடன் வெளிவிவகார அமைச்சும் அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதரகமும் தொடர்புகளைப் பேணி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வொஸிங்டனை மையமாகக் கொண்டு இயங்கி வரும் லிர்ப்ட் குருப் என்ற பொதுமக்கள் தொடர்பு நிறுவனமொன்றுடன் அண்மையில் இலங்கை மத்திய வங்கி இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகின் பல நாடுகள் இவ்வாறு பொதுமக்கள் தொடர்பு நிறுவனங்களின் ஊடாக சர்வதேச ரீதியில் நன்மதிப்பை அதிகரிக்க முனைப்பு காட்டுவது வழமை என்ற போதிலும் இலங்கை அரசாங்கம் பெரும் எண்ணிக்கையிலான நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணி வருவதுடன் பாரியளவில் பணத்தை செலவிட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளது.

# காரைநகர் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு இந்திய அரசினால் பல்வேறு உதவிகள்

## காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவர் தெரிவிப்பு



(காரைநகர்)

இந்திய அரசுக்கும் எமது வடக்கு கிழக்கு மக்களுக்கும் தொப்புள்கொடி உறவு பேணப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இப் பிரதேசத்தின் முன்னேற்றத்தினை மேலோங்கச் செய்வதற்காக இந்திய அரசாங்கம் பலதரப்பட்ட உதவிகளை மேற்கொண்டு வருகின்றமையை காணக் கூடியதாக உள்ளது என காரைநகர் பிரதேச சபை எதிர்கட்சித் தலைவரும்,ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளருமான வீ.கண்ணன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை காரைநகர் கலாசார மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் இந்திய வீட்டுத்திட்டத்திற்கு புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்திய அரசினால் காரைநகர் பிரதேசத்தின் அபிவிருத்திக் கென பல உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன. இந்த வீட்டுத் திட்டமானது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடனான இந்திய விஜயத்தின் போது முன் வைத்த கோரிக்கைக்கு அமைவாக 50,000 வீட்டுத் திட்டத்தினை பெற்றுத் தந்துள்ளார்.

அந்த வகையில் வடக்கு கிழக்கு மக்களுக்கு இவ் வீட்டுத்திட்டம் கிடைப்பதற்கு வழி சமைத்துக் கொடுத்த அமைச்சருக்கு மக்கள் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அத்தோடு ஜனாதிபதிக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கும் டக்ளஸ்தேவானந்தாவின் பணிப்புரைக்கு அமைவாக யாழ்.மாவட்டத்திற்கு பெருமளவு வீட்டுத்திட்டத்தினைத் தந்துதவியதற்காக மக்கள் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்திய வீட்டுத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட பயனாளிகள் நேர்மையாகவும், நியாயமாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆகவே இப் பயனாளிகள் இவ் வீட்டுத்திட்டத்தினை பெற்று பயனடைய வேண்டும். என்றார்.

இதில் இலங்கை செஞ்சிலுவை சங்க உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# "பிரதீபா பிரபா" விருது ஆசிரியர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பிரதி அதிபர் கே.அருளானந்தம் அரசாங்கத்தின் நல்லாசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருது வழங்கி கௌரவித்துப்பாராட்டப்பட்டுள்ளார்.

ஹாட்லிக்கல்லூரி சமூகம் இவரைப்பாராட்டியுள்ளது. மகரகம தேசிய கல்வி நிறுவனத்தில் பிரதமர் எம்.டி.ஜயரத்தின தலைமையில் நடைபெற்ற நல்லாசிரியர் விருது வழங்கும் விழாவிலே கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன இவருக்கான விருதை வழங்கிவைத்தார்.



இவர் ஹாட்லிக் கல்லூரியின் உயர்தர பகுதித்தலைவராகவும், ஒழுக்கக்குழு, விளையாட்டுக்குழு, பழையமாணவர் சங்கங்களின் உறுப்பினராகவும், வடமாகாண கல்வியமைச்சின் இணைந்த கணித வளவாளராகவும் செயற்பட்டு வருகின்றார். (10)

# ஆலய திருப்பணி வேலைகள் துரிதமாக முன்னெடுப்பு

(யாழ்.நிருபர்)

காரைநகர் மணற்காடு அருள்மிகு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

இராஜகோபுரம், மணிமண்டப வேலைகள் பூர்த்தியடைந்து தீந்தை பூசும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு உள்வீதி மண்டப கொங்கிறீற் கூரை அமைக்கும் வேலைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

எதிர்வரும் 02.02.2015 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 10 மணிவரை உள்ள சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கும்பாபிஷேக சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. (10)

# நஷ்ட ஈட்டுக்கொடுப்பனவு கிடைக்குமா? ஆதங்கப்படும் அச்சுவேலி விவசாயிகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி நகரில் வளலாய், கதிரிப்பாய், பத்தமேனி, தம்பாலை, இடைக்காடு போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகளால் 2013 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பெரும்போக வெங்காயப் பயிர்ச் செய்கையானது காலநிலை மாற்றத்தால் முற்றாக அழிவடைந்த நிலையில் இதுவரை அதற்கான நஷ்டஈடு விவசாயிகளுக்கு வழங்கப் படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இக்கொடுப்பனவிற்கு அப்பகுதி விவசாயிகள் விண்ணப்பித்திருந்தும் இதுவரை தமக்கான நஷ்டஈட்டு கொடுப்பனவுகள் எவையும் வழங்கப்படவில்லை என அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அனர்த்தங்கள் ஏற்படும் காலங்களில் விவசாயச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கையில் நஷ்டம் ஏற்படும் போது இழப்பீட்டு கொடுப்பனவு அரசினால் வழங்கப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வங்கிகளில் கடன் பெற்றும், தமது நகைகளை அடகு வைத்தும் விவசாய நடவடிக்கையினை மேற்கொண்ட விவசாயிகள் பயிர்களில் விளைச்சல் எதனையும் பெறமுடியாதபடி பயிர்கள் அழிவடைந்தமையால் கடன்களை மீளச்செலுத்தவும் நகைகளை மீட்டெடுக்கவும் முடியாத நிலையில் தாம் நம்பிக்கையிழந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

மேலும் பயிர்ச்செய்கை மூலமான வருமான இழப்பால் ஏமாற்றமும் விரக்தியுமடைந்துள்ள நிலையில் தமது அடகு நகைகள் ஏலத்தில் விலைபோகும் நிலையும் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே தமது நஷ்டஈட்டு கொடுப்பனவை விரைந்து பெற்றுத் தருமாறு அப்பகுதி விவசாயிகள் சம்பந்தப்பட்ட தரப்பினரைக் கேட்டுக் கொள்கின்றனர். (85)

# பரிசளிப்புவிழா

(அச்சுவேலி)

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் பரிசளிப்புவிழாவும் முத்தமிழ் விழாவும் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

பாடசாலை முதல்வர் ச.சத்தியவரதன் தலைமையில் பாடசாலை அரங்கில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக வடமாகாணக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கலந்து கொண்டார். தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (85)



நெல்லியடி கவுடாலை வீதியில் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாதளவிற்கு வெள்ள நீர் தேங்கி நிற்பதைக் காணலாம். (18)

# முரசின் இன்றைய பலன்



(27.10.2014 திங்கட்கிழமை)

ஜய வருஷம் ஐப்பசி மாதம் 10 ஆம் திகதி.
சதுர்த்தி / சித்தம்.
அனுச நட்சத்திரம் காலை 6.14 வரை. பின் கேட்டை பி.இ. 05.41 வரை.
இராகு காலம் 07.33 - 09.03 வரை. சுபநேரம் 12.03 - 01.33 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சரியான திட்டமிடலால் காரியம் வெற்றியைத்தரும். கடனில் ஒருபகுதியை அடைப்பதற்கு நகையை அடகுவைக்க முயலுதல். |
| ரிஷபம் | திடீரென நோய்வாய்ப்பட்ட குழந்தையின் நிலைகண்டு ஏக்கமடைதல். கேது 11இல் நிற்பதினால் எதிர்பாராத இலாபம் பெறல். |
| மிதுனம் | வியாபாரத்தில் அனுபவமில்லாததனால் நஷ்டமடைதல். மின்ஒழுக்கில் போதிய கவனம் எடுத்ததினால் தீங்கு ஏற்படாது விடல். |
| கடகம் | சகோதரருடன் ஏற்பட்ட பிணக்கு விலகிச்செல்லல். நோயில் தொல்லை அதிகரித்தல். |
| சிம்மம் | வெளிநாட்டினின்றும் உறவினர்கள் வருதல். குழந்தைப் பேறு இல்லாததால் மனமுடைதல். |
| கன்னி | கொலை, கொள்ளைகளால் அச்சமடைதல். அனுமதி பெற அதிகாரிகளையும் பிரமுகர்களையும் சந்திக்க விழைதல். |
| துலாம் | கடன் பிரச்சினை பற்றி சம்பாதித்து சாதகமான நிலையை ஏற்படுத்தல். நடுநிலைமை வகிக்கச் சென்ற விடத்தில் மானபங்கம் ஏற்படல். |
| விருச்சிகம் | உதவிகேட்டுவந்தவரின் கடந்தகால பண்புகள் தறிகெட்டிருந்ததால், கைகழுவி விடல். |
| தனுசு | குடும்ப மேன்மைக்காக வெளியூர் வேலை வாய்ப்பினை நாடவிரும்புதல், எதிர்பார்த்த பதவி கைவிட்டு செல்ல நேரிடும். |
| மகரம் | கற்பனையை விற்பனைக்கு கொண்டுவர புதிய யுக்தியினைக் கையாளுதல், சொத்துப் பிரச்சினையால் குடும்பத்தில் அமைதி கெட்டுப்போதல். |
| கும்பம் | கல்விப்புலத்தில் சாதனை புரியும் நோக்கத்தில் சகபாடிகளின் உறவைத்துண்டித்தல். |
| மீனம் | நோயின் உபாதையிலிருந்து நீங்க மருத்துவரின் ஆலோசனைப்படி நடக்க முற்படல். |

# சிகரம் தொடவேண்டும் எமது வீரர்கள்

## மைதான அடிக்கல் நாட்டு நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் எமது வீரர்கள் பங்குகொண்டு தமது திறமைகளை வெளியுலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பு. விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான உதவிகளை தொடர்ந்தும் செய்யத் தயாராகவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.







கூடைப்பந்து, வலைப்பந்து மற்றும் கரப்பந்து மைதானங்களுக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று காலை யாழ். பழைய பூங்கா வளாத்தில் நடைபெற்றது. இம்மைதானங்களுக்கான அடிக்கல்லினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோர் நாட்டி வைத்தனர்.


இம் மைதானங்கள் வடமாகாண ஆளுநரின் நிதியுத்வியுடன் அமைக்கப்படவுள்ளன.

இதன்போது உரையாற்றிய கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் மனோகரன், மூன்று விளையாட்டுத் துறைகளுக்கான மைதானங்களை அமைப்பதற்கு இடத்தை ஒதுக்கித்தந்து, அதற்கான நிதியுதவியையும் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் சந்திசிறி ஆகியோருக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று கூறினார்.

வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி தனதுரையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு இணங்க அவரது விடா முயற்சிக்கு பலன் கிடைத்துள்ளது. யாழ்.பழைய பூங்கா வளாகம் யாரும் நெருங்க முடியாத பகுதியாக காட்சியளித்தது. ஆனால் இன்று அந்த நிலை மாற்றப்பட்டு சிறுவர்களுக்கான பொழுது போக்கு மையமாகவும், மூன்று விளையாட்டு திடல்களாகவும் மாறுகின்றமையை கண்கூடாக காணக்கூடியதாகவுள்ளது. இதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு தனது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் தெரிவித்தார்.

இதில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எமது பிள்ளைகள் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்குகொண்டு தமது திறமைகளை வெளியுலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்பதே எனது எதிர்ப்பார்ப்பாகவுள்ளது. வடபகுதி மாணவர்கள் கல்வியில் மட்டும் நின்றுவிடாது விளையாட்டுத்துறை உட்பட சகல துறைகளிலும் முன்னேற்றம் காணவேண்டும். மேலும் எமது மாணவர்கள் விளையாட்டுத்துறையில் மேலும் பலசாதனைகள் படைக்க வேண்டுமென்பதுடன் விளையாட்டுத்துறைக்குத் தேவையான உதவிகளை தொடர்ந்தும் செய்யத் தயாராக இருப்பதாகவும் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் எனவும் தெரிவித்தார். அத்துடன் மைதான நிர்மாணப் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட வேண்டுமென துறைசார்ந்தவர்களுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ரூபசிங்கம், அரச நிலஅளவையாளர் திருமதி சிவேந்திரா கலாநிதி, யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, பிரதம கணக்காளர் குகதாசன், யாழ்.மாநகர ஆணையாளர் பிரணவநாதன், முன்னாள் வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அண்ணாத்துரை, உள்ளூராட்சி மன்றக் கணக்காளர் அகிலன் உட்பட கரப்பந்து, வலைப்பந்து, கூடைப்பந்து ஆகிய சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



## வலிமையை பரிசோதிக்க சிறந்த களம்

இந்திய அணிக்கெதிரான ஒரு நாள் தொடர் எங்கள் வலிமையை பரிசோதித்துப் பார்க்க சிறந்த களமாக அமையும் என எதிர்பார்க்கின்றேன் என இலங்கை அணியின் பயிற்றுநர் அத்தபத்து தெரிவித்துள்ளார். இந்தியாவுடனான ஒருநாள் தொடர், எங்கள் வலிமையை சோதித்து பார்க்க சிறந்த ஒரு போட்டியாக இருக்கும். திடீரென இத்தொடர் அறிவிக்கப்பட்டாலும், அதற்கு சிறந்த முறையில் தயாராகி வருகிறோம். இந்திய ஆடுகளங்கள் குறித்து எனக்கும், சிரேஷ்ட வீரர்களுக்கும் நன்கு புரியும். அதற்கேற்ற வகையில் செயற்பட்டு எங்கள் திறனை வெளிப்படுத்த முயற்சிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெளியானது ஒரு நாள் போட்டிக்கான அட்டவணை

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடருக்கான அட்டவணை இந்திய கிரிக்கெட் சபையால் வெளியிடப்பட்டுள்ளது. இதன் படி, நவம்வர் 2ஆம் திகதி முதலாவது ஒரு நாள் போட்டி கட்டாக்கிலும், நவம்பர் 6ஆம் திகதி இரண்டாவது ஒரு நாள் போட்டி அகமதாபாத்திலும், நவம்பர் 9ஆம் திகதி மூன்றாவது ஒரு நாள் போட்டி ஹைதராபாத்திலும், நவம்பர் 13ஆம் திகதி நான்காவது ஒரு நாள் போட்டி கொல்கத்தாவிலும், 16ஆம் திகதி ஐந்தாவது ஒரு நாள் போட்டியில் ராஞ்சியிலும் நடைபெறவுள்ளது. அனைத்து ஆட்டங்களும் பகல்-இரவு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# அதிக சதம்; யுனிஸ்கான் சாதனை

(டுபாய்)

அதிக சதம் விளாசிய பாகிஸ்தானியர் என்ற சிறப்பை யுனிஸ்கான் பெற்றுக் கொண்டார்.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் யுனிஸ்கான் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டின் முதல் இனிங்ஸில் சதமடித்த நிலையில் 2ஆவது இனிங்ஸிலும் அவர் சதம் விளாசினார்.

92ஆவது டெஸ்டில் விளையாடிய யுனிஸ்கானுக்கு இது 26ஆவது டெஸ்ட் சதமாகும். இதன் மூலம் அவர் புதிய சாதனை படைத்தார். டெஸ்டில் அதிக சதம் அடித்த பாகிஸ்தான் வீரர் என்ற சாதனையை நிகழ்த்தினார். இதற்கு முன்பு இன்சமாம் 25 சதம் (120 டெஸ்ட்) அடித்திருந்தார். முதல் இனிங்ஸில் இன்சமாமின் சாதனையை சமன் செய்த அவர் இரண்டாவது இனிங்ஸில் இன்சமாமின் சாதனையை முறியடித்தமை குறிப்பிடத்தக்கது. மொகமட் யூசுப் 24 சதத்துடன் 3ஆவது இடத்திலும், மியாண்டட் 23 சதத்துடன் 4ஆவது இடத்திலும் உள்ளார்.



யுனிஸ்கான் முதல் இனிங்ஸிலும் சதம் (106 ஓட்டங்கள்) அடித்திருந்தார். இதன் மூலம் இரண்டு இனிங்ஸிலும் சதம் அடித்த 7ஆவது பாகிஸ்தான் வீரர் என்ற பெருமையை யுனிஸ்கான் பெற்றார்.

இதற்கு முன்பு பாகிஸ்தான் வீரர்களில் ஹனிப்முகமது (111 ஓட்டங்கள், 104 ஓட்டங்கள். இங்கிலாந்து 1962), மியாண்டட் (104 மற்றும் 103. நியூசிலாந்து, 1984), வஜதுல்லா வாஸ்தி (133 மற்றும் 121. இலங்கை 1999), யாசிர் ஹமீது (170 மற்றும் 105, பங்களாதேஷ் 2003), இன்சமாம் (109 மற்றும் 100. இங்கிலாந்து, 2005), மொகமட் யூசுப் (102 மற்றும் 124. மே.தீவுகள் 2006) ஆகியோர் இரண்டு இனிங்ஸிலும் சதம் அடித்திருந்தனர்.

டெஸ்டில் அதிகம் சதம் அடித்த சாதனை வீரரான யுனிஸ்கான் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டியிலிருந்து என்னை நீக்கியதால் டெஸ்ட் தொடரிலிருந்து விலக முடிவு செய்தேன். ருவென்ரி-20 மற்றும் ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் தோற்றதால் நான் எனது முடிவை மறுபரிசீலனை செய்தேன். குடும்பத்தினரும் நண்பர்களும் என்னை ஊக்குவித்தனர். இன்சமாம் சாதனையை முறியடிக்க முடியும் என்று என்னிடம் கூறினார்கள். அவுஸ்ரேலியாவுக்கு எதிராக நான் சதம் அடிக்காததால் இது சவாலாகவே இருந்தது. இரண்டு இனிங்ஸிலும் சதம் அடித்தது எனக்கு மகிழ்ச்சியை அளித்தது எனத் தெரிவித்தார்.

# முதல் டெஸ்ட்; பாகிஸ்தான் பெரு வெற்றி



(டுபாய்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் 222 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி அபார வெற்றிபெற்றது.

பாகிஸ்தான், அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நேற்று டுபாயில் நிறைவடைந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 454 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வோர்னர் சதம் விளாசினார். 151 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் யுனிஸ்கான் 103, அகமட் ஷொகாட் 131 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஓ கீவ் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்நிலையில் 438 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி ஷல்பிகார் பாபர், ஜஷீர் ஷா ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ரோஜர்ஸ், ஸ்ரீபன் ஸ்மித், ஜோன்சன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் அவுஸ்ரேலிய அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் 127 பந்துகளை எதிர்கொண்ட ஜோன்சன் ஒரு சிக்ஸர், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 61, ரோஜர்ஸ் 43, டோவிட் வோர்னர் 29, ஸ்ரீபன் ஸ்மித் 55 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜஷீர் ஷா நான்கு, ஷல்பிகார் பாபர் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக இரு இனிங்ஸிலும் சதம் விளாசிய யுனிஸ்கான் தெரிவு செய்யப்பட்டார்.

# இரண்டு பிரிவுகளில் சென். ஜோண்ஸ் வெற்றி

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான நட்புறவுக் கால்பந்துப் போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி ஒரு பிரிவில் வெற்றிபெற்றது.

நட்பு ரீதியிலான கால்பந்துப் போட்டி தற்போது யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் சென். ஜோண்ஸ் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான போட்டி கடந்த வாரம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 14, 16, 18, 21 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்றன.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளுமே சமபலம் கொண்டவையாகத் திகழ்ந்ததுடன் மாறி மாறி பந்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. இதன் விளைவாக இரு அணிகளும் ஒவ்வொரு கோலையே பெற்றுக்கொண்டதுடன் போட்டி சமநிலையானது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளுமே இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை. இதன் மூலம் இப்போட்டி சமநிலையானது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் முற்பாதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு முன்னிலை பெற்றது. பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சியுற்ற சென். ஜோண்ஸ் கல்லூரி அணி அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு பதிலடி கொடுத்ததுடன் போட்டியை சமநிலை செய்தது.

21 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (93)



யாழ். இந்துக் கல்லூரியின் கால்பந்து அணிகளுக்கான விசேட பயிற்சி முகாம் ஒன்று அண்மையில் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 14, 16, 18, 21 வயதுப் பிரிவு அணிகள் பங்குகொண்டன. இப்பயிற்சி முகாமின் வளவாளர்களாக விசேட பயிற்சியாளர்கள் அழைக்கப்பட்டு கால்பந்து குறித்து நுணுக்கங்களை வீரர்களுக்குப் போதித்தனர். பயிற்சி முகாமில் பங்குகொண்ட வீரர்களைக் காணலாம்.

# வல்வை ரேவடி இளைஞரின் கால்பந்து இளங்கதிர் இளைஞர் அணி சம்பியன்

(வல்வை)

தீபாவளித் திருநாளை முன்னிட்டு வல்வை ரேவடி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் கால்பந்து போட்டியில் இளங்கதிர் இளைஞர் அணி கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. தீபாவளித் திருநாளை முன்னிட்டு வல்வெட்டித்துறை பிரதேச கால்பந்து அணிகளுக்கிடையில் ரேவடி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் கால்பந்தாட்டத் தொடர் கடந்த வாரம் ரேவடி இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் வல்வை சைனிங்ஸ், வல்வை நேதாஜி, வல்வை தீருவில் இளைஞர், உதயசூரியன், வல்வை ரெயின்போ, இளங்கதிர் அணிகள் பங்குகொண்டன.

இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் தீருவில் இளைஞர் அணியும் இளங்கதிர் இளைஞர் அணியும் மோதின. இதில் இளங்கதிர் இளைஞர் அணி வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வல்வை சைனிங்ஸ் அணியும் ரெயின்போ அணியும் மோதின. இதில் ரெயின்போ அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இறுதிப் போட்டியில் இளங்கதிர் இளைஞர் அணியும் ரெயின்போ அணியும் மோதின. இரு அணிகளுமே சமபலம் கொண்ட அணியாக முட்டி மோதிக் கொண்டன. இதன் விளைவாக முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சியுற்ற இளங்கதிர் இளைஞர் அணி மிகச் சதுர்யமாக கோல் ஒன்றைப் பெற்றுக் கொண்டதுடன் முன்னிலை பெற்றது. இறுதியில் இளங்கதிர் இளைஞர் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் சிறந்த கோல் காப்பாளராக இளங்கதிர் அணியைச் சேர்ந்த பிரசாத் தெரிவு செய்யப்பட்டார்.

# கீர்த்தனன் கூடைப்பந்து அரையிறுதி இன்று

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரியினால் நடாத்தப்படும் அமரர் கீர்த்தனன் நினைவு கூடைப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறவுள்ளன.

யாழ் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியும் யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளன.

பெண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும் இராமநாதன் கல்லூரி அணியும் மோதவுள்ள அதேவேளை, இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

விளையாட்டு செய்திகள்

# பார்சிலோனாவைப் பந்தாடிய மட்ரிட்

லா லிகா கால்பந்து போட்டியின் லீக் ஆட்டத்தில் ரியல் மட்ரிட் 3-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனாவை வீழ்த்தியது.

ஸ்பானிஷ் லீக் தொடரில், கிளாசிக் மோதல் என்று அழைக்கப்படும் ரியல் மட்ரிட், பார்சிலோனா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப்போட்டியில் ஆட்டம் ஆரம்பமாகி மூன்றாவது நிமிடத்திலேயே, பிரேசிலைச் சேர்ந்த நம்பிக்கை நட்சத்திரம் நெய்மர், ரியல் மட்ரிட் பின்கள வீரர்களை ஏமாற்றி அழகாக கோல் அடித்தார். ஆனால், ஜெரார்ட் பீக்கே எதிரணி வீரர்களுடன் மோதலில் ஈடுபட ரியல் மட்ரிட் அணிக்கு பெனால்டி கிக் கிடைத்தது. இதை எந்தத் தவறும் செய்யாமல் கோலாக மாற்றினார் ரியல் மட்ரிட்டின் கிறிஸ்டியானோ ரொனால்டோ. இதனால் முதல் பாதி 1-1 என சமநிலை அடைந்தது.






பிற்பாதியில், டோனி க்ரூஸ் கார்னரில் இருந்து அடித்த பந்தை ரியல் மட்ரிட் அணியின் பின்கள வீரர் பெபே தலையால் முட்டி கோல் அடித்தார். அடுத்த சிறிது நிமிடத்தில், ரியல் மட்ரிட்டின் ரொனால்டோ, கரீம் பென்ஸிமா, ஜேம்ஸ் ராட்ரிகஸ் ஆகிய மூவரும் ஒருவருக்கொருவர் துல்லியமாக பாஸ் செய்தனர். இதன் விளைவு, கரீம் பென்ஸிமா தனது பங்குக்கு ஒரு கோல் அடித்தார். அந்த நிமிடத்தில் இருந்து பார்சிலோனா வீரர்கள் சோர்வடையத் தொடங்கினர்.

ஆட்டம் முடிய 20 நிமிடங்கள் இருந்தபோது, பார்சிலோனா அணியின் நடுகள வீரர் ஆண்ட்ரு இனீஸ்டா காயம் காரணமாக வெளியேறினார். நான்கு மாத தடைக்குப் பின் களம் புகுந்த லூயிஸ் சொரஸம், பெஞ்சுக்குத் திரும்பினார்.

பார்சிலோனா அணியின் நம்பிக்கை வீரர் மெஸ்சி, கடைசி வரை கோல் அடிக்கவில்லை. முடிவில் ரியல் மட்ரிட் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி வாகை சூடியது.

# தொடரை வெல்வோம்

இலங்கை அணிக்கெதிரான ஒரு நர்ள் தொடரில் சிறப்பாகச் செயற்பட்டு தொடரை வெல்வோம். வெற்றியைத் தீர்மானிக்கின்ற வீரர்கள் பலர் அணியில் இருப்பதும், சொந்த மண்ணில் தொடர் நடைபெறவிருப்பதும் எங்களுக்குச் சாதகமே. இருப்பினும் இலங்கை அணியை நாங்கள் குறைத்து மதிப்பிடவில்லை. கூட்டுப் பலமே இலங்கை அணியின் வெற்றிக்குக் காரணம் என்பதில் ஐயமில்லை என இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தவான் தெரிவித்துள்ளார்.



# நடால் விலகல்


(மட்ரிட்)

குடல்வால் அறுவை சிகிச்சை செய்துகொள்ளவுள்ளதால், ஏடிபி உலக இறுதி ரென்னிஸ் தொடரில் இருந்து விலகுவதாக நட்சத்திர வீரர் ரபேல் நடால் அறிவித்துள்ளார். சுவிஸ் உள்ளரங்கு ஏடிபி டென்னிஸ் தொடரின் காலிறுதியில் குரோஷியாவை சேர்ந்த போர்னா கோரிச்சுடன் நேற்று முன்தினம் மோதிய நடால் 2-6, 6-7 (4-7) என்ற நேர் செட்களில் தோற்றார். குடல்வால் தொற்று பாதிப்பால் அவதிப்பட்டு வரும் அவர், ஏடிபி உலக இறுதி ரென்னிஸ் வரை அறுவை சிகிச்சையை ஒத்திவைக்க திட்டமிட்டிருந்தார். ஆனால், சுவிஸ் தொடரில் வலி காரணமாக இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் தடுமாறியதை அடுத்து, உடனடியாக அறுவை சிகிச்சை செய்துகொள்ள முடிவு செய்துள்ளார்.

நவம்பர் 3ஆம் திகதி அவருக்கு அறுவை சிகிச்சை நடைபெறவுள்ளது. அதன் பின்னர் 2 மாத காலம் ஓய்வெடுக்க உள்ள நடால், ஜனவரி 5ஆம் திகதி ஆரம்பமாகும் கட்டார் ஓப்பனில் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழ் சூழலின் நிலையிலிருந்து இம்முறை பட்ஜெட்டில் கவனத்துக்குரிய விடயங்கள்

**- சாலையூரான் -**



மகிந்த ராஜபக்ச மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் நிலையில் முன்னெப்போதும் இல்லாத முக்கியத்துவத்தை இம்முறை ஜனாதிபதி தேர்தலும் கூடவே வரவு செலவுத்திட்டமும் பெற்றிருக்கிறது.

தேர்தலில் வெற்றிபெறத் தவறினால் தமது இருப்பும் வாழ்வும் கேள்விக்குறியாகி விடலாம் என்கிற நிலை எதிர்த்தரப்புக்கு மட்டுமன்றி ஆளும்தரப்புக்கும் ஒரு சவாலாகவே மாறியிருக்கின்ற நிலையில் சம்பள உயர்வுகள், பல்வேறு உதவித் திட்டங்கள் இம்முறை பட்ஜெட்டில் அரசால் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில், போருக்குப் பிந்திய சூழலில் தமிழ் மக்களின் அபிவிருத்தி குறித்த பிரச்சினைகளை முன்னிலைப்படுத்துவது இவ்விடத்தில் அவசியமாகிறது.

கடந்த 5ஆண்டு காலத்தில் அத்தியாவசிய விநியோகங்கள் மாத்திரமன்றி நாடு முழுவதற்குமான சந்தையை கொண்டிருக்கும் அனைத்து வெளிமாவட்ட விநியோக மார்க்கங்களும் தமிழ் சூழலில் விரிவாக்கம் பெற்றிருக்கின்றன.

இருப்பினும் தொழிலொன்றை ஆரம்பிக்கவென வங்கிகளிடமிருந்து கடன் பெற்றுக் கொண்டவர்களில் பெரும்பாலானோர் அக்கடன்களை மீளவும் திருப்பி செலுத்த முடியாத நிலையில் வங்கி அதிகாரிகளுக்கு தலைமறைவாகியிருப்பது இங்கு சர்வ சாதாரணமாகி இருக்கிறது.

வெளிநாட்டு பணவாய்ப்பை கொண்டுள்ளவர்கள் தவிர, நிரந்தர மாத வருமானமொன்றைக் கொண்டிராத அனைத்து மக்களினதும் இருப்பென்பது மிகவும் நெருக்கடிக்குள்ளாகி இருப்பது சமகால நிலைமையில் குறிப்பிட வேண்டிய ஒரு பிரச்சினை.

போருக்குப் பிந்திய தமிழ் சூழல் என்ற வகையில் வன்னி பெருநிலப் பரப்பிலும் கூடவே குடாநாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் மீளக்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தொழில் என்ன நிலையில் இருக்கிறது என்பது நம் அனைவரினதும் கவனத்துக்குரிய ஒன்று.

மீள்குடியமர்வு என்பது இந்த மக்களைப் பொறுத்தவரை ஏறத்தாழ மறுபிறவி எடுத்ததற்கு சமமான ஒரு நிலைமை என்றே கூறவேண்டும்.

எனவே, இந்த மக்களின் பயிர்த் தொழில் வருமானங்களை ஊக்குவிப்பதற்கு இப்போது நடைமுறையிலிருக்கும் உதவித் திட்டங்களுக்கு புறம்பாக எரிபொருள் மற்றும் இடைத்தர உபகரணங்களின் கொள்வனவுக்கான மானிய உதவிகள் பற்றி இம்முறை நிதி ஒதுக்கீட்டில் கவனம் செலுத்தாமல் இவர்களது உற்பத்தி முயற்சிகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவது இயலாத காரியம்.

கூடவே கடந்த மூன்று வருடங்களாக தொடரும் வரட்சியும் பருவம் தப்பிய மழையும் இந்த மக்களை பாதித்திருப்பதால் மீளச் செலுத்த முடியாதிருக்கும் இவர்களின் விவசாயக் கடன்களை ரத்துச் செய்வதுடன் குடிநீருக்கும் பயிர்ச்செய்கைக்கும் வசதியாக அனைத்து சிறு குளங்களதும் புனரமைப்பை உத்தரவாதம் செய்தல் என்பதும் கவனத்துக்குரிய விடயமாகிறது.

மீள்குடியமர்வின் முதற்கட்டமாக இந்த மக்களுக்காக நடைமுறைப் படுத்தப்பட்ட நிரந்தர வீட்டுத்திட்டத்தில் ஒவ்வொரு குடும்பமும் குறைந்தது ஒன்றரை இலட்சம் ரூபா வரை கடனாளியாக்கப்பட்டிருக்கிறது.

குடாநாட்டிலும் வன்னியிலும் இந்த வீட்டுத்திட்டத்தை பெற்றுக் கொண்ட எந்தவொரு குடும்பமும் இந்தக் கடன் பொறியிலிருந்து தப்பவில்லை என்பதால் இவர்களுக்கான கடன் நிவாரணம் இந்த பட்ஜெட்டில் எதிர்பார்க்கப்பட்டது.

அரசின் வடக்குக்கான இவ்வாண்டு உதவித் திட்டங்களில் கால்நடை வளர்ப்புக்கென கூடுதல் பயனாளிகள் தெரிவாகி இருக்கிறார்கள்.

இருப்பினும் இந்த உதவிகளை உரிய முறையில் பயன்படுத்துவதற்கான உத்தரவாதங்களோ முன்னேற்பாடுகளோ முறையாக இல்லை என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.


பொருத்தமான இடங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட அரசின் நவீன கூட்டுப் பண்ணை முறைமையின் கீழ் கால்நடை வளர்ப்புக்கான நிதி ஒதுக்கீடு பற்றி கவனம் செலுத்தப்படுமாயின் அது நமது சூழலில் ஒரு முன்னுதாரணமான நடவடிக்கையாக உணரப்படும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் மக்களுக்கான கைத்தொழில் முயற்சிகள் பற்றிய அவதானிப்பில் உள்ளூர் மூலவளங்களை அடிப்படையாகக் கொண்டு அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை மூலம் கவனம் செலுத்த வேண்டிய உற்பத்தி நடவடிக்கைகள் பிரதானமானவை. இதற்கான நிதி ஒதுக்கீடுகள் சாத்தியப்படும் பட்சத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகளின் வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வை காணக் கூடியதாக இருக்கும்.

• கூடவே ஆனையிறவு உப்பளம், காங்கேசன்துறை சிமெந்து, பரந்தன் இரசாயன தொழிற்சாலைக்கான நிதி ஒதுக்கீடுகளும் தமிழ் சூழலின் வேலையின்மை பிரச்சினைக்கு தீர்வாக அமைவது மட்டுமன்றி வடக்கின் ஏனைய கைத்தொழில் முயற்சிகளுக்கும் இது பக்கபலமாக அமைய வாய்ப்பு

---

# கே.வி. மகாதேவன்



**18**

**- பி.ஜி.எஸ்.மணியன் -**

சம்பூர்ண ராமாயணம் படத்தின் மாபெரும் வெற்றியின் மூலம் கே.வி. மகாதேவன் தமிழ்த் திரை உலகில் தவிர்க்கமுடியாத இசை அமைப்பாளராகிவிட்டார்.

தொடர்ந்து வெளிவந்த "பொம்மைக் கல்யாணம்", "மனமுள்ள மறுதாரம்" ஆகிய படங்கள் சுமாரான வெற்றியைப் பெற்றாலும் மகாதேவனின் இசை அமைப்பில் சில பாடல்கள் இன்றும் நம் நினைவில் நிற்கும் வண்ணம் அமைந்து விட்டன.

"பொம்மைக் கல்யாணம்" படத்தில் சிவாஜி கணேசனுக்கான பாடல்களை ஏ.எம். ராஜாவைப் பாடவைத்தார்.

"அன்பே நீ அங்கே நான் இங்கே வாழ்ந்தால் இன்பம் காண்பது எங்கே" - ஏ.எம்.ராஜா, ஜிக்கி - இன்றளவும் பிரபலமான ஒரு பாடல்.

"மனமுள்ள மறுதாரம்" - முரசொலி மாறன் கதை வசனம் எழுதிய படம். பாலாஜி - சரோஜா தேவி நடித்த படம்.

இந்தப் படத்தில் சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் ஒலித்த "இன்பம் எங்கே இன்பம் எங்கே என்று தேடு" என்ற மருதகாசியின் பாடல் இன்றளவும் இரசிகர்கள் மனத்தில் நீங்காத இடம் பெற்ற ஒரு பாடல்.

இந்நிலையில், ஆரம்பத்தில் மகாதேவனுக்கு வாய்ப்புக் கொடுத்து வளர்த்துவிட்ட "மாடர்ன் தியேட்டர்ஸ்" நிறுவனத்தோடு மீண்டும் ஒரு படத்தில் இணைந்தார். அந்தப் பாடல்கள் அனைத்துமே சூப்பர் டூப்பர் ஹிட் பாடல்களாக மாறி காலத்துக்கும் அவரது பெயரை நிலை நிறுத்திவிட்டன.

அந்தப் படம்தான் "வண்ணக்கிளி"

அந்நாளில் குறிப்பிடத்தகுந்த இயக்குநர்களில் ஒருவரான டி.ஆர். ரகுநாத் இயக்கத்தில் சென்னையைச் சேர்ந்த ராமசாமி சுப்ரமணிய மனோகர் என்ற ஆர்.எஸ். மனோகர் கதாநாயகனாக நடித்த படம். 1950 இல் "ராஜாம்பாள்" படத்தின் மூலம் கதாநாயகனாக திரையுலகில் நுழைந்த மனோகர் தொடர்ந்து சில படங்களில் கதாநாயகனாக நடித்தார். ஆனால் அவை எல்லாம் சரியாகப் போகாததால் வில்லன் வேடத்துக்கு மாறினார் அவர்.

இப்போது சொல்கிறோமே "நெகட்டிவ்" ரோல் ஹீரோ என்று அந்த வகையான கதாபாத்திரத்தில் கதாநாயகனாக படம் முழுவதும் அருமையான நடிப்பைப் படர விட்டிருந்தார் ஆர்.எஸ். மனோகர். அவருக்கு ஜோடியாக பி.எஸ். சரோஜா - கதாநாயகி வண்ணக்கிளியாக வாழ்ந்தே காட்டி இருந்தார்.

வண்ணக்கிளியின் சகோதரனாக பிரேம் நசீரும் பண்ணையாரின் மகளாக மைனாவதியும் (நடிகை பண்டரிபாயின் தங்கை) நடித்திருந்தனர்.

பாடல்கள் மருதகாசி.

அது என்னவோ - மருதகாசி - மகாதேவன் கூட்டணியில் விளைந்த பாடல்கள்




பெரும்பாலும் வெற்றிப்பாடல்களாகவே அமைந்து இன்றளவும் கேட்பவரின் காதுகளையும் மனங்களையும் நிறைத்துக்கொண்டிருக்கின்றன!

எளிமையான வார்த்தைகளில் அருமையான கருத்துக்களை கேட்பவர் நெஞ்சங்களில் பதிய வைப்பது மருதகாசிக்கு கைவந்த கலை என்றால் அந்த வார்த்தைகளைச் சிதைக்காமல் பாடலின் கருத்து கேட்பவர் மனங்களில் பதியும் படி இசை அமைப்பது மகாதேவனுக்கு கைவந்த கலை.

"காட்டுமல்லி பூத்திருக்க காவல் காரன் காத்திருக்க - ஆட்டம்
போடும் மயிலைக்காளை தோட்டம் மேயப் பார்க்குதடா.
மாட்டுக்கார வேலா உன் மாட்டைக் கொஞ்சம் பார்த்துக்கடா." - சீர்காழி கோவிந்தராஜன் பிரேம் நசீருக்கு பின்னணி பாடி இருந்தார்.

"போகாத பாதையிலே போகக்கூடாது - சும்மா
புத்தி கெட்டு அங்கும் இங்கும் சுத்தக்கூடாது
மாடாகவே மனுஷன் மாறக்கூடாது - மத்தவங்க
பொருளின் மேல ஆசைவைக்கக் கூடாது.."

- சின்னக்குழந்தைக்குக் கூட தெள்ளத் தெளிவாகப் புரியும் வார்த்தைகள்.

சரணம் முடிந்த பிறகு வரும் "மாட்டுக்கார வேலா" என்று விளிக்கும் போது அந்த "வேலா"வுக்கு சீர்காழி கோவிந்தராஜன் கொடுக்கும் அழுத்தம். அந்த வரிகள் வரும்போது வாத்திய இசைக் கருவிகளே இல்லாமல் மகாதேவன் கொடுக்கும் நிசப்தம். அடுத்த வரியில் தொடரும் தாளக்கட்டு -

கே.வி. மகாதேவனின் தனிப்பாணி இங்குதான் ஆரம்பமானது.

சரணத்தை முடிக்கும் போது கடைசி வரிகளை நிசப்தமாக ஒலிக்கவிட்டு பல்லவிக்கு வரும்போது வாத்தியங்களை ஒரு தாளக்கட்டோடு துவங்கும் பாணி - பாடலைக் கேட்கும்போது நம்மையும் அறியாமல் தலையை அசைத்து ஒரு சபாஷ் போட வைக்கும்.

கிராமியப் பாணி பாடல்களில் தனக்கு நிகர் தானே என்று மகாதேவன் பறைசாற்றிய படம் வண்ணக்கிளி என்று கூட சொல்லலாம்.

"சித்தாடை கட்டிக்கிட்டு சிங்காரம் பண்ணிக்கிட்டு
மத்தாப்பு சுந்தரி ஒருத்தி மயிலாக வந்தாளாம்." - எஸ்.சி. கிருஷ்ணன் - பி. சுசீலா பாடிய கிராமிய நாட்டுப்புற நடனக் கலைப்பாடல். (கள்ளபார்ட் நடராஜனின் விறுவிறு நடனம் பார்ப்பவரை பிரமிக்க வைக்கத் தவறாது.)

ஏற்கெனவே "மணப்பாறை மாட்டை" சிந்துபைரவி ராகத்தில் கட்டி இழுத்த மகாதேவன் - அதே சிந்துபைரவியில் "சித்தாடை கட்டிக்கிட்டு" பாடலை முற்றிலும் மாறுபட்ட விதத்தில் நாயனம், தவில் பின்னணியில் அட்டகாசப் படுத்திவிட்டார்.

இன்றைய இளசுகளைக் கூட கவர்ந்து நிற்கும் பாடல் இது.

(தொடரும்)

உண்டு.

இவற்றை உடன் மீளமைத்து செயற்படுத்துவதற்கான நிதிவளங்களை கண்டறிவது வடக்குக்கான தலைமைகளுக்குரிய கடமையாகும்.

வடக்கின் கடற்றொழிலாளர்கள் தமது கடலுணவு உற்பத்திகளுக்கு, கொழும்பிலும் வெளிநாடுகளிலும் கிடைக்கின்ற விலைகளில் பாதிய-ளவையேனும் பெறமுடியாதிருப்பது அவலமானது.


இதற்கான மாற்று நடவடிக்கையாக கடற்றொழில் கூடுதலாக நடைபெறும் இறங்கு துறைகள் சார்ந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவென கடலுணவு-களை பதனிடுதல், மற்றும் பொதி செய்வதற்கான நிலையங்களை அந்தந்த இடங்களில் நிறுவுவதில் கவனம் செலுத்துவது அவசியம்.

கூடவே கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் மானியமும் இடைநிறுத்தப்பட்டிருப்பதை கவனத்திலெடுத்து இம்முறை பட்ஜெட்டில் இதற்கான நிதி ஒதுக்கீடுகள் இனங்காணப்படுவது அவசியம்.

இந்திய மீனவரின் அத்துமீறிய மீன்பிடியால் கடல்வளங்கள் அழிக்கப்பட்டுள்ள நிலையில் ஆழ்கடல் மீன்பிடியை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை எமது மீனவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதும் அவசியமான தாகும்.

அரசியலுக்காக வாக்குகளுக்காக கேட்பதை கொடுப்பதை விடுத்து, கூடுதலான மக்களின் பரந்து பட்ட நலன்களுக்காக எத்தகைய திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதை தேர்ந்து ஆராய்ந்து முன்னெடுக்கும் போது தான் அது அனைத்து மக்களாலும் உண்மையான அபிவிருத்தியாக உணரப்படும்.

# தெரியுமா?



• கனமான கண்ணாடியைவிட மெல்லிய கண்ணாடியே வெப்பத்தைத் தாங்கும் சக்தி உள்ளது.

• பிளாஸ்டிக்கில் முதன்முதலில் செய்யப்பட்ட பொருள் பந்து.

• லிப்ஸ்டிக் என்கிற உதட்டுச்சாயம் மீன் செதில்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

• மின்னல் 500 அடி முதல் 3 கி.மீ. வரை நீள்கிறது. ஆனால் இத்தனையும் 1.6 விநாடிகளுக்குள்ளேயே நடந்து விடுகிறது.

• மிகப்பெரிய மேகக் குவியலில் ஒன்றரை இலட்சம் தொன் வரை தண்ணீர் இருக்குமாம்.

• உலகம் முழுவதும் இரவும் பகலும் சமமான அளவில் உள்ள நாள்கள் எவை தெரியுமா? இரண்டே இரண்டு நாள்கள்தான். அவை: மார்ச் 21, செப்டம்பர் 23.

• அட்லாண்டிக் பகுதியில் ஆண்டிற்கு ஒருமுறைதான் சூரியன் உதயமாகிறது.

• வானவெளி வீரர்கள் பூமியைச் சுற்றிவரும்போது ஒவ்வொரு நாளும் 16 சூரியோதயங்களையும் 16 சூரிய அஸ்தமனங்களையும் காண்பார்கள்.

• வட்டவடிவமான வானவில்லில் ஒரு பாதியை மட்டும்தான் நாம் பார்க்கிறோம். முழு வானவில்லையும் பார்க்கும் அதிர்ஷ்டம் சிலசமயம் விமானப் பயணிகளுக்குக் கிடைக்குமாம்.

• நீண்ட காலமாக சிகரெட் பிடிப்பவர்களின் இரத்தத்தை அட்டை உறிஞ்சினால், அந்த அட்டை இறந்துவிடும்.

• திருக்குறள் தமிழின் முதல் எழுத்தாகிய "அ"வில் தொடங்கி கடைசி எழுத்தாகிய "ன்"இல் முடிவடைகிறது.

• திருக்குறளில் பயன்படுத்தப்படாத எழுத்து "ஔ"

• கடிகாரத்தில் நிமிட முள் 1670-ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் வைக்கப் பட்டது. அதற்கு முன் ஒரே ஒரு முள்தான் இருந்திருக்கிறது.

• ஒரு கைக்கடிகாரத்தில் 150 பாகங்கள் உள்ளன.

• உலகிலுள்ள 32 நாடுகள் வெறும் தீவுகளாகும்.

• உலகில் 26 நாடுகளுக்குக் கடற்கரையே கிடையாது.



# மற்றொரு ஒற்றுமை..!

சொந்த நாடு என்று ஒன்று இல்லாமல் நாடு நாடாக சிதறிக் கிடந்தனர் யூத இன மக்கள். ஒவ்வொரு நாட்டிலும் அவர்கள் துன்புறுத்தப்பட்டனர். இரண்டாம் உலகப் போரில் ஹிட்லர் முறியடிக்கப்பட்டதும், ஆபிரிக்காவில் உள்ள உகாண்டாவை, யூதர்களுக்கு உரிய நாடாக அறிவிக்க நேச நாடுகள் முன்வந்தன. ஆனால், யூதர்கள் அதை ஏற்கவில்லை. தங்கள் பழைய நாடான, இஸ்ரேலே வேண்டும் என்றனர். எனவே, அரபுப் பகுதியில், மீண்டும் யூதர்களின் இஸ்ரேல் அமைக்கப்பட்டது.

உலகம் எங்கிலும் இருந்த யூதர்கள், இஸ்ரேலில் குடியேறினர். வழக்கொழிந்து போன ஹீப்ரு மொழியை, மீண்டும் பேச்சு மொழியாக்கினர். பள்ளிப் பாடம் எல்லாம் ஹீப்ரு மொழியில்!

இன்று, அதெல்லாம் பழங்கதை ஆகிவிட்டது. பல யூதர்களுக்கு, இஸ்ரேல் சலித்துப் போய் விட்டது. விலை வாசி உயர்வு, கடுமையான வரிவிதிப்பு, வசிப்பதற்கு நல்ல வீடு கிடைக்காமை, அரபு நாடுகளுடன் இடைவிடாது நடக்கும் யுத்தம், இவையெல்லாம் சேர்ந்து, நவீன இஸ்ரேல் மக்களை, சலிப்படையச் செய்து விட்டன.

எனவே, மேற்கு நாடுகளுக்கு தற்காலிக விசா வாங்கிக் கொண்டு, சுற்றுலா பயணிகளைப் போல இஸ்ரேலை விட்டுப் புறப்படுகின்றனர். அப்படிப் போகிறவர்கள் திரும்பி வருவதே இல்லை. சென்ற ஆண்டில் மட்டும் பல லட்சம் யூதர்கள் இஸ்ரேலிலிருந்து, "எஸ்கேப்!" யூதர்களை எப்படி இஸ்ரேலிலேயே தக்க வைத்துக் கொள்வது என்பதுதான், இஸ்ரேலின் தற்போதைய பிரச்சினை!

**- 'இஸ்ரேல் - ஒரு பார்வை' நூலிலிருந்து.**

# பெரியாரின் வாரிசுதான் ஜெயலலிதா

**- க. திருநாவுக்கரசு கட்டுரையிலிருந்து.**

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் முன்னாள் சோவியத் யூனியனுக்கான இந்தியத் தூதுவராக இருந்தபோது நடந்ததாகச் சொல்லப்படும் நிகழ்ச்சி இது. அன்றைய சோவியத் தலைவரான ஜோசப் ஸ்டாலினை அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பிற நாட்டுத் தூதுவர்கள் சந்திப்பது அவ்வளவு எளிதானதல்ல. ஆனால், ராதாகிருஷ்ணன் தத்துவஞானி என்பதால் அவருடன் உரையாடுவதை ஸ்டாலின் விரும்பினார். ஆகவே, அவர்களின் சந்திப்பு அவ்வப்போது நடந்தது.

அத்தகைய ஒரு சந்திப்புக்குப் பிறகு, கிரெம்ளின் மாளிகையிலிருந்து வெளிவந்த ராதாகிருஷ்ணனுடன் கைகுலுக்க விரும்பினார் அவரை அழைத்துவந்த ரஷ்ய கார் ஓட்டுநர். "என்னுடன் கைகுலுக்க ஏன் விரும்புகிறீர்கள்?" என்று ராதாகிருஷ்ணன் கேட்டபோது அதற்கு அந்த ஓட்டுநர், "இந்தக் கைகள்தானே ஸ்டாலினுடன் கைகுலுக்கியவை, அதனால்தான்" என்றாராம். சீனாவில் மாவோ எப்படி வழிபடப்பட்டார் என்பது உலகறிந்தது. பொதுவாகவே, சர்வாதிகாரிகள் வெற்றிகரமாக அதிகாரத்தில் தொடர்வதற்கு, அவர்கள் கேள்விக்கு அப்பாற்பட்டு வழிபடப்படுவது அவசியம் என்பதால் அவர்கள் அதைத் திட்டமிட்டு உருவாக்கி ஊக்குவித்தனர்.

ஆனால், இது சர்வாதிகாரிகளின் ஆயுதம் மட்டுமல்ல. காந்தி அவரது சீடர்களாலும் மக்களாலும் ஏறக்குறைய தெய்வமாகவே வழிபடப்பட்டார். காந்தியின் சொல்லும் செயலும் இந்த பிம்பத்துக்கு வலுவூட்டுவதாக இருந்ததே தவிர, அதைத் தகர்த்தெறிவதாக இல்லை. காங்கிரஸில் வெளிப்படையான விவாதங்கள் நடந்தபோதிலும் காந்தியின் வார்த்தைகளே இறுதியா-னவையாக இருந்தன.

காந்தியையும் மனதில் வைத்துக் கொண்டுதான் அம்பேத்கர், "தனது வாழ்நாள் முழுவதும் நாட்டுக்காகச் சேவை செய்த மாபெரும் மனிதர்களுக்கு நன்றியுடன் இருப்பதில் தவறில்லை. ஆனால், நன்றி காட்டுவதற்கு எல்லை இருக்கிறது.



மதத்தில் வேண்டுமானால், பக்தி என்பது ஆன்ம விடுதலைக்கான பாதையாக இருக்கலாம். ஆனால், அரசியலில் பக்தி அல்லது நாயக வழி-பாடானது தாழ்வுக்கும், இறுதியாக சர்வாதிகாரத்துக்குமான பாதையாகவே இருக்கும்" என்றார்.

தனது வாழ்நாள் முழுவதையும் மனித குலத்தின் மேன்மைக்காக அர்ப்பணித்த மனிதர்களை வழி-படுவதே ஆபத்தானது, தவறானது என்றால் கருணாநிதி, ஜெயலலிதா, ராமதாஸ், விஜயகாந்த் போன்றவர்கள் அவர்களது தொண்டர்களால் வழிபாடு செய்யப்படுவதை எப்படிப் பார்ப்பது? பல ஆண்டுகளுக்கு முன்னால் கருணாநிதியின் பிறந்த நாளின்போது, "நீ வாழ்ந்த காலத்தில் நான் வாழ்ந்தேன் என்ற ஒரு பெருமை போதும் எனக்கு" என்று அறிவித்த ஒரு சுவரொட்டி வாசகம் நினைவுக்கு வருகிறது.

தங்கள் தலைவர்கள் யாரையும் வாழ்த்த வயதில்லாமல் வணங்க மட்டுமே செய்கிற தொண்டர்களால் தமிழகம் நிறைந்திருப்பது ஏன்? தொண்டர்கள் அல்ல, இரண்டாம் நிலைத் தலைவர்களே தங்கள் கட்சியின் தலைவர்களை மேடைகளில் பெயர் சொல்லிக் குறிப்பிடுவது மரியாதைக் குறைவானது எப்படி? கட்சியில் தலைவன்.·.தலைவியைத் தவிர்த்து, வேறு யாருக்குமே சுயமரியாதை இருக்கக் கூடாது என்ற நிலை இன்று தமிழகத்தின் எல்லா கட்சிகளிலும் (இடதுசாரிக் கட்சிகளைத் தவிர்த்து) உருவாகிவிட்டது எப்படி?

பூமித் தாய் தடுக்காவிட்டால் இன்னமும் சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து வணங்கத் துடிக்கும் அமைச்சர்கள், பெருமக்களைக் கொண்டவர் ஜெயலலிதா.

சுயமரியாதைக்கென இயக்கம் கண்ட ஒரு மாநிலத்தில் இப்படி நடைபெறுவது மாபெரும் முரண்நகையாகத் தோன்றக்கூடும். ஆனால், பெரியார் உருவாக்கி வளர்த்த சுயமரியாதை இயக்கத்திலும், திராவிடர் கழகத்திலும் சுயமரியாதை அழிப்பு இருந்திருக்கிறது.

"நான் சொல்வது சரியா, தவறா என்று சிந்தித்துப் பார்த்துச் சரியென்று பட்டால் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று பொதுமக்களிடம் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்ட பெரியார், ஒருபோதும் அந்தச் சிந்தனை சுதந்திரத்தைத் தனது இயக்கத்திலிருந்த பிற தலைவர்களுக்கோ தொண்டர்களுக்கோ வழங்கவில்லை.

சர்வாதிகாரியாக நடந்துகொள்வதை ஒப்புக் கொள்ளும் பெரியார், இது கழகத்தின் லட்சியத்துக்காக, பொது நன்மைக்காக என்கிறார். எல்லா சர்வாதிகாரிகளும் சொல்லும் அதே நியாயத்தைத்தான் பெரியாரும் சொல்கிறார். பகுத்தறிவுப் பகலவன் என்று போற்றப்படும் பெரியாருக்குத் தனது இந்த சர்வாதிகாரம், சுயமரியாதை என்ற கோட்பாட்டுக்கே எதிரா-னது என்பது புரியாது போயிருக்க வாய்ப்பில்லை.

விதையொன்று போட்டால் சுரையொன்றா முளைக்கும்? சுயமரியாதை அழித்தொழிப்பு விஷயத்தில் பெரியார் போட்ட விதை இன்று ஆலவிருட்சமாய் ஓங்கி வளர்ந்திருக்கிறது. இந்த விஷயத்தில் பெரியார் போட்ட பாதையைத்தான் கருணாநிதி, எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோர் பின்பற்றியுள்ளனர்.

ஜெயலலிதா சிறையில் அடைக்கப்பட்டது முதல் பிணையில் விடுவிக்கப்பட்டது வரை தமிழகத்தில் நடந்த கூத்துகளையெல்லாம் என்னவென்று சொல்வது? "விதியே, விதியே! தமிழ்ச் சாதியை என் செய நினைத்தாய்?" என்று 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் கேட்ட கேள்விக்கான விடை 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்படி இருக்கும் என்று "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்" என்று பாடிய பாரதியால்கூட எதிர்பார்த்திருக்க முடியாது.






காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்விப்பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும், மாணவிகளின் நடன நிகழ்வையும்காணலாம். (50)





# நிகழ்வுகளின் பதிவுகள்....

யாழ். நாவாந்துறை சென்.மேரிஸ் சனசமூக நிலையத்தில் அண்மையில் ஹரிதாஸ் கிழூடெக் நிறுவனமும் யாழ். பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய நடமாடும் சேவையின் போது.... (105)






யாழ் விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது. இதில் இளைப்பாறிய மாகாண கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா மங்கள விளக்கேற்றுவதையும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர் ம. சின்னத்தம்பி மாணவிக்கு பரிசில் வழங்குவ்தையும் காணலாம். (01)

கிளிநொச்சி தொண்டைமான் நகர் கிராமத்தில் வாழ்வின் எழுச்சி 6ஆம் கட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதில் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டபோது.. (77)



நெல்லியடியிலிருந்து கொடிகாமத்துக்கு செல்லும் இராஜகிராம வீதி மக்கள் போக்குவரத்து செய்யமுடியாதளவுக்கு வெள்ளநீர் தேங்கி காணப்படுகிறது... (18)



தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற கண்காட்சி நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலரும் கவிஞருமாகிய த.ஜெயசீலன் கலந்துகொண்டு கண்காட்சியை பார்வையிடுவதைக் காணலாம். (90)

# வங்கியில் கடன் பெற்றவர்களை விடுத்து பிணையாளரிடம் வசூலிப்பது ஏற்றதல்ல

## இலங்கை வங்கி மீது வாடிக்கையாளர்கள் சீற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி தனது கிளைகளில் கடன் பெற்று அதனை மீள செலுத்தாதவர்களின் கடனை அறவிடுவதற்கு முயற்சிக்காது, பிணையாளிகளிடமிருந்து மட்டுமே கடனை அறிவிட்டு வருவதாக வாடிக்கையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, வங்கி அதிகாரிகள் சிலர் கடனுக்கு விண்ணப்பிப்பவரது நிதி ஸ்திரதன்மை அசையும் அசையா சொத்துகள் பற்றி கவனம் செலுத்தாது பிணையாளிகளை மட்டுமே நம்பி கடன் வழங்கிவிட்டு தற்போது அப்பிணையாளிகளின் வங்கி கணக்கில் உள்ள பணத்தினை கடனுக்காக கழித்து பெற்றுக்கொள்வதுடன அவர்களது கணக்கினையும் முடக்கி வைத்துள்ளனர். இதனால் பிணையாளிகள் பெரிதும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடன் பெற்று கொண்டவர்களோ சுதந்திரமாகவும ஆடம்பரமாகவும் சுற்றித்திரிகின்றனர்.

கடன் பெற்றவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவும் வங்கி முயற்சிப்பதாக தெரியவில்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது. இவ்வாறு பாதிக்கப்பட்ட ஒருவர் தகவல் தெரிவிக்கும் போது, பிணைக்கையொப்பம் இட்ட காரணத்தினால் எம்மிடம் கடனை அறவிடுவது தவறல்ல. ஆனால் கடனாளியிடம் கடனை அறவிடாது எம்மிடம் மட்டுமே கடனை அறவிடுவதாகவும் இதனால் நாம் சிறுகச்சேமித்த பணத்தினை சில நொடிகளில் இழந்து விடுகிறோம்.

எனது கணக்கில் இருந்த நாற்பதாயிரம் ரூபா வரை இது வரை அறவிட்டுள்ளனர். அவற்றுக்கான எழுத்து மூலமான அறிவுறுத்தல்கள் கூட ஒழுங்காக கிடைக்கவில்லை என்றார்.

இதேவேளை வேறு சில அரச மற்றும் தனியார் வங்கிகளின் வெளிகளஉத்தியோகத்தர்கள் கடனாளியின் முகவரிக்கு தேடிச் சென்று கடன் செலுத்தாமைக் கான காரணங்களைக் கேட்டு கடனை மீளச்செலுத்துமாறுஎச் சரிப்பதுடன் மீளச்செலுத்துவது பற்றிய உறுதி மொழியையும் எழுத்தில் பெற்று செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (54)

## கைதடி கலைவாணி வித்தி ஆறாம் இடத்தில்

(கைதடி)

கல்வி அமைச்சின் பிள்ளைநேய பாடசாலை செயற்றிட்டத்தின் கீழ் கைதடி கலைவாணி வித்தியாலயம் ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளது. இதனால் பாடசாலையின் தற்போதைய வளர்ச்சி, பெற்றோர் பழைய மாணவர் பங்களிப்பு, பாடசாலை சுற்றாடல் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கிய வீடியோ பதிவு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் பாடசாலை அதிபர் நா.கருணாகரன் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (90)

## நினைவுப் பேருரை

(யாழ்.நிருபர்)

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் வி.சிவசுப்பிரமணியத்தின் 18 ஆவது ஆண்டு நினைவுப்பேருரை கல்லூரி அதிபர் இ. ஈஸ்வரதாசன் தலைமையில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும்.

'நீண்டகாலப்பயன்நிறை கல்வி' என்ற பொருளில் உடுவை எஸ்.தில்லை நடராஜா நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார். வைத்திய கலாநிதி எஸ். சிவானந்தராஜா நிறைவுரை நிகழ்த்துவார். (10)

## சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டம்

(அச்சுவேலி)

கோப்பாய் பிரதேச சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு வழமை போன்று பிரதிநிதிகளை இதில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

இக் கூட்டத்தில் அச்சுவேலி, கோப்பாய் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (85)

# புங்குடுதீவில் ஹரிதாஸ் அமைக்கும் மழை நீர் சேமிப்பு தொட்டிகள்

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர், புங்குடுதீவு சமூக பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், ஹுதேக் ஹரிதாஸ் நிறுவனத்திடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று, 'மழைநீர் சேமிப்புத் தொட்டிகள்' ஒன்பதை தமது செலவில் அமைத்துதர முன்வந்தது.பின்னர் ஹுதேக் ஹரிதாஸ் நிறுவனம், கிராம சேவையாளர், பிரதேச செயலர் பிரிவுகளுடன் இணைந்து 'மழைநீர் சேமிப்புத் தொட்டிகள்' ஒன்பதையும் அமைக்கும் இடங்களைத் தெரிவு செய்து, தற்போது அதன் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

புங்குடுதீவு பகுதியில் ஹுதேக் ஹரிதாஸ் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்படும் 'மழை நீர் சேகரிப்பு தொட்டிகள்' மடத்துவெளி சனசமூக நிலையம், மடத்துவெளி கிராம சேவையாளர் அலுவலகம், தல்லையபற்று முருகன் கோவில், பாரதி சனசமூக நிலையம், சவேரியார் கடற்றொழிலாளர் சங்கம், றோமன் கத்தோலிக்க பாடசாலை, அமெரிக்க மிஷன் பாடசாலை, சிவலைப்பிட்டி துரைசாமி பாடசாலை, இறுப்பிட்டி முன்பள்ளி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.




காரைநகர் தலைமைத் தபாலகத்தில் அண்மையில் நடைபெற்ற அஞ்சல் தின விழாவில் தபால் மா அதிபர்,உதவித்தபால் மா அதிபர், தபால் திணைக்கள பிரதம கணக்காளர் ஆகியோர் சக ஊழியர்களுடன் இணைந்து சத்தியப்பிரமாணம் செய்வதைக் காணலாம். (50)




## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பதவி வெற்றிடங்கள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**முகாமையாளர் (சட்டம்)** - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட சட்டத்துறை இளமாணி அல்லது சட்டத்தரணியுடன் சட்டத்துறையில் பட்டப்பின் படிப்புடன் (முது நிலை) அரச துறையில் அல்லது தனியார் துறையில் குறித்த முகாமைத்துவ நிலையில் ஆகக்குறைந்தது 15 வருட முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

35 வயதுக்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**முகாமையாளர் (திட்டமிடலும் தகவலும்)** - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து வெகுசன ஊடகம் / முகாமைத்துவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்தில் உரிய பதவி வகையில் ஆகக்குறைந்தது 15 வருட அனுபவத்துடன் பட்டப்பின் படிப்பு பட்டத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

35 வயதுக்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**உதவி முகாமையாளர் (சட்ட அமுலாக்கல்)** - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து குற்றவியல் அல்லது சட்டத்துறையில் இளமாணி பட்டத்துடன் அரச துறையில் அல்லது தனியார் துறையில் குறித்த துறையில் ஆகக்குறைந்தது 3 வருட முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**மொழி பெயர்ப்பாளர் (தமிழ்)** - அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனத்தில் உரிய துறையில் பொருத்தமான பதவியில் ஆகக்குறைந்தது ஒரு வருட அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தமிழ் மற்றும் ஆங்கிலம் அல்லது சிங்களம் ஆகிய மொழிகள் உள்ளடங்கலாக மொழிகளில் பெற்றுக்கொண்ட பட்டம்.

18 வயதுக்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**முகாமைத்துவ உதவியாளர்கள் (சிங்களம் மற்றும் தமிழ்)**- க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ், ஆங்கிலம், கணிதம் உள்ளடங்கலாக 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலதிக தகைமைகள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

18 வயதுக்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் கல்வி, தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் என்பவை அடங்கிய சான்றிதழ்களை உறுதிப்படுத்தி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தவிசாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, இல.330, தலவத்துகொட வீதி, மாதிவெல, ஸ்ரீ ஜயவர்த்தனபுர என்ற முகவரிக்கு சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தின் இடது பக்க மேல் மூலையில் 'குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவம்' என எழுதப்படல் வேண்டும்.

## பொதுச் சுகாதார கள உத்தியோகத்தர்கள் (சுகாதார அமைச்சு)

சுகாதார அமைச்சின் கீழ் பொதுச் சுகாதார கள உத்தியோகத்தர் பயிற்சி நெறிக்கு மாணவர்களை திறந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சினால் நடத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை திறமை அடிப்படையில் பயிற்சிக்குத் தகுதிவாய்ந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப்பரீட்டசையில் சிங்களம் / தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இப்பயிற்சிக் காலம் ஒரு வருடமாகும். திருப்திகரமாக பயிற்சியினைப் பூர்த்தி செய்யும் பயிலுநர்களுக்கான பரீட்சையில் சித்தியடையும் பயிலுநர்கள் பொது சுகாதார கள உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

பயிற்சி நெறியின்போது பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 (ii) இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

18 வயதுக்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணம் **300** ரூபாவாகும். இதனை இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையில் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிலுள்ள 7041318 எனும் கணக்கிற்கு எந்தவொரு இலங்கை வங்கியிலும் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது விண்ணபத்தினை எதிர்வரும் நவம்பர் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் (நிர்வாகம் 06), சுகாதார அமைச்சு, சுவசிறிபாய, இல.385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தினை அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பொது சுகாதார கள உத்தியோகத்தர் 2014' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

இதற்கான மேலதிக விபரங்களை கடந்த 24.10.2014 ஆம் திகதி வெளிவந்த அரச வர்த்தமானியில் பார்வையிட முடியும்.

தொகுப்பு:- சி.என்.எச். சாலிஸ்

# இதுவரை கிடைத்த மேலதிக கொடுப்பனவுகள் அடிப்படைச்சம்பளத்துடன் இணைகிறது

## அரச ஊழியர்களுக்கான ஊதியம் உயரவாய்ப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு இதுவரை கிடைத்த மேலதிக கொடுப்பனவுகள் அனைத்தும் அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த நிதிமற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் சரத் அமுனுகம மேற்படி தகவலை தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கும போது,

இலங்கை வரலாற்றில் குறுகிய காலத்திற்கு பிரதமராக இருந்த காலத்தில் எந்தவித பதவியும் வழங்காத காலம் ரனில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த காலமே என நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போது எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்- அன்றைய வாக்களிப்பில் மக்கள் மறக்க முடியாத தகவல் ஒன்றை வழங்கினர். அதனால் அது தொடர்பில் வாதமிடத் தேவையில்லை.சுனில் ஹந்துன்னெத்தியின் கேள் விக்கும் தொடர்ந்து பதிலளிக்கையில் அரச சேவையாளர்களுக்கு இதுவரை கிடைத்த அனைத்து கொடுப்பனவுகளும் சம்பளத்துடன் இணைகிறது. வாழ்க்கைச் செலவுக்கான கொடுப்பனவு மேலதிக கொடுப்பனவாகும்.

வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் வேறுபடும். ஆனால் அது அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்கப்படாது. மேலும் அது 2200 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. வரவுசெலவுக்கு முன்னர் தொழிற்சங்கங்களுடன் உரையாற்றும் போது இதுதொடர்பில் அவர்கள் தெரிவித்தனர்.

கொடுப்பனவுகளை சம்பளத்துடன் இணைப்பதனூடாக அது ஓய்வூதியத்திற்கு- 'கணக்கெடுக்கும் போது- சேமலாப நிதிய அதி கரிப்பு என்பவற்றுக்கு ஏதுவாக அமைகிறது என அவர் சுட்டிக்காட்டினார்.

# சுகாதாரப் பரிசோதகர்கள் பகிஷ்கரிப்பு

பொதுசுகாதாரப் பரிசோதகர் ஒருவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்து கிழக்கு மாகாணத்தில் பொது சுகாதார பரிசோதகர்களால் முன்னெடுக்கப்படும் பணிப் புறக்கணிப்பு ஏழாவது நாளாக நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றது.

இதுவரை மாகாண சுகாதார திணைக்களத்தால் தங்களின் கோரிக்கைகளுக்கு எவ்விதமான பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளவில்லை என அகில இலங்கை பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் உப தலைவர ஜீ. சரவணபவன் தெரிவிக்கின்றார்.



## பரமர் சங்கமம்

'அற்பனுக்கு மவுசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்' எண்டது போலை எங்கடையள் சிலதுகள் நடக்கிறதைக் காணமுடியுது. அதுக்காகப் பரமர் எந்த வயித்தெரிச்சலோடையும் சொல்லேல்ல வயித்து நிறைவோடை தான் பேசப்போறன்.

என்னெண்டா ஒரே நாளில் ஒரே நேரத்தில் கிட்டக் கிட்ட எண்டில்லாமல் எட்ட எட்ட எண்டாலும் இலக்கியக் கூட்டங்களைப் போடுறதைப் பற்றி இலக்கியம் நுகர்வோர் மத்தியில் ஆதுங்கத்தைக் கொடுப்பதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றக் கலைத்தூது மண்டபத்தில் யாழ்-இலக்கியக் குவியத்தின் பெர்லின் நினைவுகள் நூல் வெளியீடென அறிவிக்கப்பட்டிருந்தது.

அதில் இருந்து நூறு யார்தூர இடைவெளியில் அமைந்திருக்கும் குருநகர் கலாசார மண்டபத்தில் தேவிபரமலிங்கத்தின் புதிய படைப்புலகம் சிறுகதை நூல் லெளியீட்டைக் குருநகர் நாட்டுக் கூத்து மன்றத்தினர் பிற்பகல் 3.45 மணிக்கு நடாத்துவதாக அறிவித்திருந்தனர்.

இப்பெல்லாம் யாழ்ப்பாணத்தில் நூல் வெளியீடு இலக்கியச் சந்திப்புகள், பயிற்சிப் பட்டறைகள் எண்டு சனி, ஞாயிறுகள் வந்து விட்டால் நடந்து கொண்டிருப்பது இலக்கிய நுகர்வோர் காட்டில் நல்ல மழையாகவே அமைந்து விடுகிறது.

ஆனால் ஒண்டையும் விட்டுவிடாமல் நுகர்பவர் நெஞ்சில் இதுக்குப் போவதா அதுக்குப் போவதா எண்ட அலை மோத வைத்து விடுவதும் தவிர்க்க முடியாமல் அமைந்து விடுகிறது. அரை ஆண்டிலும் ஓராண்டிலும் நிகழும் இத்தகைய நிகழ்வுகள் அடிக்கடி இடம்பெற்று வருவதால் இலக்கிய உலகில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியாகவே கருத முடியும்.

ஒரே நாளில் ஒரே நேரத்தில் கிட்டத்தட்ட பக்கம் பக்கமாகவே நூறுயார் இடைவெளி தூரங்களில் அமையக்கூடிய இலக்கியம் சார் கூட்டங்களை தவிர்த்து நேர மாற்றங்களோடை எதிர் காலங்களில் ஒழுங்கு செய்தால் நுகர்வோர் கஷ்டங்கள் தீரவாய்ப்புண்டு.

ஒருவர் கூட்டத்தை ஒருவர் குழப்புவதாக இதை எடுத்துக் கொள்ளக்கூடாது. வெளிமாவட்டங்களில் ஆடிக்கொண்டும், அமாவாசைக் கொண்டுமாக நிகழும் இலக்கிய நிகழ்வுகள் யாழில் அபரிமிதமாக அமைவதைத் தான் இது காட்டுகிறது.

இலக்கியக் கூட்டங்கள் இவ்விதம் அற்பனுக்கு மவுசு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான் எண்டது போல அமையாமல் பாத்துக் கொள்ளலாமல்லவா இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்?

# புலிகளின் சொத்து முடக்கம் பிரிட்டனில் தொடர்ந்தும் அமுல்



(லண்டன்)


பிரிட்டனில் உள்ள புலிகளின் சொத்துக்கள் தொடர்ந்தும் முடக்கி வைக்கப்படும் என்று பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

ஐரோப்பிய நீதிமன்றம் விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பாக சமீபத்தில் அளித்துள்ள தீர்ப்புக் குறித்து ஆராய்ந்து வருவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது. 2000 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பிரிட்டனில் விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டது.

இது ஐரோப்பிய ஒன்றிய ஏற்பாடுகளிலிருந்து வித்தியாசமானது. அதேவேளை இந்தத் தீர்ப்பு உறுப்பு நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் ரீதியிலான ஒன்றல்ல என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும. நடைமுறை விதிகளின் அடிப்படையில் சட்ட ரீதியாக புலிகளுக்கு எதிரான தடை நீக்கம் பற்றிய தீர்ப்பு இது என்பதும் முக்கியமானது.

பிரிட்டனும் ஏனைய உறுப்பு நாடுகள் போன்று குறிப்பிட்ட தீர்ப்பு மற்றும் பொருத்தமான அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய்ந்து வருகிறது. இதே வேளை அடுத்த மூன்று மாத காலத்திற்கு விடுதலைப் புலிகளின் சொத்துக்களின் முடக்கம் நீடிக்கும் என இலங்கைக்கான பிரிட்டனின் தூதரக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# ஆட்கடத்தலில் தொடர்பு இலங்கையர் மூவர் இந்தியாவில் கைது



(கொழும்பு)

வளர்ந்து வரும் இளம் உதவி இயக்குநர் ஒருவரை இலங்கையைச் சேர்ந்த மூவர் கடத்தி கப்பம கோர முயற்சித்துள்ளனர். 25 வயதான ஜெகன், 47 வயதான ரவீந்திரன் மற்றும் 21 வயதான தினேஸ் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்படைய சிவா மற்றும் ஜெந்திரன் மேலும் இரண்டு பேர் தலைமறைவாகியுள்ளனர். 28 வயதான நிரோஜன என்ற உதவி இயக்குநரை கடத்தி இரண்டு நாட்கள் தடுத்து வைத்திருந்ததாக இலங்கையர்கள் மீது குற்றம் சுமத்தபட்டுள்ளது.

வளசரவாக்கம் என்னும் இடத்தில் அமைந்துள்ள விடுதியொன்றில் இந்த உதவி இயக்குநர தடுத்து வைக்கப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. விடுதி கடத்தியவர்களுக்கு சொந்தமானது எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# டெங்கு அபாயம் கொழும்பில் உச்சம்

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் வீதம் அதிகரித்துள்ளதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

மாவட்டத்தில் இடைக்கிடை நிலவும் சீரற்ற வானிலை டெங்கு நோய் பரவுவதற்கு காரணம் என கொழும்பு மாநகர சபையின் தலைமை சுகாதார வைத்திய பரிசோதகர் ருவன் விஜயமுனி குறிப்பிடுகின்றார்.

கொழும்பு மாவட்டத்தில் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் மூன்றாம் திகதி வரை மாத்திரம் 177 டெங்கு நோயா ளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தலைமை சுகாதார வைத்திய பரிசோதகர் ருவன் விஜயமுனி சுட்டிக்காட்டியுள்ளார்.

# மலையில் மாய்மாகிய ஜேர்மனிய பெண் மீட்பு

(கொழும்பு)

ஹன்னஸ்கிரிய, உடதும்பர தொத்துராகலை மலையில் ஏறிய போது காணாமல் போன ஜேர்மன் நாட்டு பிரஜையான 70 வயதுடைய பெண், அட்டைக் கடிக்கு உள்ளான நிலையில் 30 மணிநேரத்துக்கு பின்னர் தேயிலை தோட்டமொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக உடதும்பர பொலிஸார் தெரிவித்தனர்.

ஜேர்மன் நாட்டு பிரஜைகளான மூன்று ஆண்கள் அடங்கிய பத்துபேர் கொண்ட குழு இந்த மலையில் வெள்ளிக்கிழமை ஏறியுள்ளது.

அக்குழுவுடன் சென்ற இந்த பெண் சுமார் 300 மீற்றர் தூரம் ஏறியதன் பின்னர் தன்னால் இனி மலையேற முடியாது என்றும் தான் திரும்பி போவதாகவும் குழுவுக்கு அறிவித்துவிட்டு அங்கிருந்து திரும்பியுள்ளார்.

அதன் பின்னர், அப்பெண் தொடர்பில் எவ்வாறான தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் அக்குழுவினர் "ஹ்ன்னஸ்கிரிய பொலிஸில் முறைபாடு செய்திருந்தனர்.

அதனையடுத்தே இந்த தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. காணாமற போன பெண்ணை தேடும் நடவடிக்கையில் இராணுவம், விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் மற்றும் பொதுமக்களும் இணைந்திருந்தனர்.

அவர்களுக்கு உதவி யாக இலங்கை விமானப்படை யின் ஹெலிகெப்டரும் பயன்படுத்தப்பட்டது.

திரும்பி செல்வதாக தெரிவித்த அந்த பெண், பயணம் ஆரம்பிக்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் இரண்டரை கிலோமீற்றர் தூரத்திலிருந்து சுயநினைவு இழந்த நிலையில் மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹெல உறுமயவுடன் முறுகல் ஜனாதிபதியுடனான சந்திப்பிலும் பிரதிபலிப்பு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவுடனான சந்திப்பின்போது அவர்கள் முன்வைத்த கருத்துக்களால் சீற்றமடைந்த ஜனாதிபதி அந்த கூட்டத்திலிருந்து இடைநடுவிலேயே வெளியேறினார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற இந்தச் சந்திப்பின் போது ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதயின் இரண்டாவது பதவிக்காலம தொடர்பாக கடுமையாக விமர் சித்ததாகவும் தெரியவருகின்றது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது: ஜாதிக ஹெல உறுமயவுடனான அரச தரப்பின் சந்திப்பின் ஒரு கட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ சீற்றமடைந்து தனது ஆசனத்திலிருந்து எழுந்தார்- 'நான் வேறு சிலரை சந்திக்க வேண்டியுள்ளது' எனத் தெரிவித்துவிட்டு அங்கிருந்து வெளியேறினார்.

ஜனாதிபதி வெளியேறும் போது ஜாதிக ஹெல உறுமயவின் வண. அத்துரலிய ரத்ன தேரரைப் பார்த்து 'நானும் நீங்களும் ஒரே கிராமத்தை சேர்ந் தவர்கள்' என தெரிவித்துவிட்டு- ஜனாதிபதியை தோற்கடிக்கப் போவதாக தேரர் தெரிவித்துள்ளமை குறித்து தனது அதிருப்தியை வெளியிட்டார். ஜனாதிபதி மாத்தறையின் கம்புறுபிட்டியவில உள்ள பலட்டுவயில் பிறந்தவர். வண. அத்துரலிய ரத்ன தேரரின் கிராமத்துக்கு அருகிலேயே இது உள்ளது.

இதனையே ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி சென்ற பின்னரும் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்கள் பஸில் ராஜபக்ஷவுடனும், வேறு சிலருடனும் பேச்சுக்களை தொடர்ந்தனர். இதன்போது ஜாதிக ஹெல உறுமயவின் யோசனைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் முன்னிலையில் சமர்ப்பித்து ஆராய்வதாக பஸில் தெரிவித்தார்.

எனினும் இந்த சந்திப்புக் குறித்து திருப்தியடையாத வர்களாக ஜாதிக ஹெல உறுமயவினர் வெளியேறினர். குறிப்பாக ஜனாதிபதி இடைநடுவில் வெளியேறியமை குறித்து அவர்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டனர். அத்துடன் ஜனாதிபதி தங்களை அவமானப்படுத்தி விட்டார எனவும் கூறினர்.

## தரம் 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு

1 மணி



**01) சரியான விடையின் கீழ் கோடிடுக**

1) காற்றினால் கிடைக்கும் ஒரு நன்மை எது?
 1) பொருட்கள் எரிவதில் உதவும் 2) சூழலை மாசுபடுத்தும்
 3) மரங்களை உடைக்கும் 4) வீட்டுக் கூரையைச் சேதப்படுத்தும்

2) வளியை நிரப்பக்கூடிய ஒரு பொருள் அல்லாதது எது?
 1) பலூன் 2) பந்து 3) பொலித்தீன் பை 4) சாக்கு

3) மாணவர்களின் கல்வி அறிவை ஊக்குவிப்பதில் முன்னின்று செயற்படும் ஒரு நிறுவனம் எது?
 1) ஐரோப்பியன் யூனியன் 2) யுனிசெப் அமைப்பு
 3) உலக சுகாதார ஸ்தாபனம் 4) ஐக்கிய நாடுகள் சபை

4) ஒரு மாணவன் சிறந்த ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு
 1) உடற்பயிற்சி செய்தல் வேண்டும் 2) நன்றாக கல்வி கற்றல் வேண்டும்
 3) அதிகளவு உணவு உண்ணுதல் வேண்டும் 4) நீண்ட நேரம் தூங்குதல் வேண்டும்

5) நீரில் வளரக்கூடிய ஒரு தாவரம் எது?
 1) முருங்கை 2) பப்பசி 3) தாமரை 4) தென்னை

6) பின்வரும் மண்களுள் எது கறுப்பு நிறமான மண் ஆகும்?
 1) செம்மண் 2) வண்டல்மண் 3) களிமண் 4) மணல்மண்

7) மண்ணிலே வாழும் ஒரு அங்கி எது?
 1) அட்டை 2) பாம்பு 3) மண்புழு 4) கரப்பான்

8) வீதிகளை திருத்தும் வேலைகளைச் செய்வோர்
 1) பொலிஸார் 2) நகரசபையினர் 3) மாணவர்கள் 4) வாகனசாரதிகள்

9) தொலைபேசியில் உரையாட வேண்டுமெனில் எங்கு செல்லுதல் வேண்டும்?
 1) கச்சேரிக்குச் செல்லுதல் 2) தபாற்கந்தோருக்குச் செல்லுதல்
 3) வங்கிக்குச் செல்லுதல் 4) வைத்தியசாலைக்குச் செல்லுதல்

10) பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துமடல் ஒன்று அனுப்பப்படுவதில்லை?
 1) புதுவருட தினத்தில் 2) வெசாக்தினம்
 3) கிறிஸ்மஸ்தினம் 4) வீடு குடிபுகும்தினம்

11) பாடசாலை அபிவிருத்தி சங்கத்தில் அங்கத்துவம் வகிப்போர் அல்லாதவர்?
 1) ஆசிரியர் 2) அதிபர் 3) பெற்றோர் 4) நகரசபையினர்

12) நகரம் ஒன்றில் மக்கள் கூடும் ஒரு இடம் எது?
 1) வீடு 2) சந்தை 3) வீதிகளில் 4) நதிக்கரைகளில்

13) கடற்கரையை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களின் பிரதான தொழிலாகக் கருதப்படுவது எது?
 1) விவசாயம் 2) மீன்பிடி 3) வைத்தியம் 4) அரச உத்தியோகம்


14) மழை பெய்வதனால் கிடைக்கும் ஒரு பாதிப்பு அல்லாதது எது?
 1) குளிர்ச்சி 2) மண்சரிவு 3) மண்ணரிப்பு 4) வெள்ளப்பெருக்கு

15) வைத்தியசாலையில் காணப்படும் ஒரு கருவி அல்லாதது எது?
 1) உடல் ஒலி பெருக்கி 2) X - கதிர்க்கருவி
 3) ECG கருவி 4) ஒலி பெருக்கி

**10. Read and match**

| | |
|---|---|
| 1) Moter | Soda |
| 2) Drink | Rice and curry |
| 3) Eat | Cycle |
| 4) Three wheeler | Air |
| 5) Aeroplane | Auto |

**11. படத்தை அவதானித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக**




1) A,B,C,D,E எனக் குறிப்பிடுவோரைப் பெயரிடுக.

______________________

2) A,B,C,D இனர் பின்பற்றும் மதங்களைத் தருக.

______________________

3) C இனர் பேசும் மொழியைத் தருக.

______________________

4) இங்கு ஒவ்வொருவராக என்ன செய்கின்றனர்?


______________________

5) இவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?


______________________

**தெரிந்துகொள்வோம் : கடதாசியினால் காற்றாடி ஒன்றை அமைத்தல்**

மாணவர்கள் கடதாசி ஒன்றில் 15 சென்றிமீற்றர் அளவுள்ள சதுரத்துண்டு ஒன்றை வெட்டிக்கொள்க. கீழேயுள்ள செய்முறைக்கு ஏற்றவாறு செய்து காற்றாடி ஒன்றை அமைக்குக.





1) புள்ளிக்கோட்டு வழியே இரண்டாக மடிக்குக.
2) மீண்டும் ஒருமுறை மடிக்குக.
3) ஒரு விரலை வைத்து அடையாளமிட்டுக்கொள்க.



4) அடையாளமிட்டு வெட்டிக்கொள்க.
5) வளைத்து நுனிப்பகுதியை ஒட்டுக்கொள்க
6) ஒட்டிய இடத்தின் மேலே வட்டமான சிறிய துண் டொன்றை வைத்து குண்டூசி ஒன்றினால் தடியில் பொருத்திக்கொள்க.

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளிவரும்**

2. பின்வரும் படத்தை அவதானித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.



1) மேலேயுள்ள படம் எதைக் கூறுகின்றது? ------------------------------------------------
2) உயரமாக வளர்ந்துள்ள மரத்தின் பெயர் என்ன? ------------------------------------------------
3) வீட்டுக்கு எவ்வாறான சேதம் ஏற்பட்டுள்ளது? ------------------------------------------------
4) படத்தில் மேலும் சேதமடைந்துள்ள இரு பொருட்களைத் தருக ------------------------------------------------
5) காற்றினால் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டு தருக. ------------------------------------------------

**3. தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் சரி ( ✓ ) எனவும் பிழையாயின் பிழை (X) எனவும் கூட்டினுள் இடுக.**

1) பாடசாலையின் அபிவிருத்திக்கு அதிபர் மட்டுமே உதவுகின்றார்
2) இலங்கையில் தொலைபேசி வசதிகள் போதியளவு, இல்லை.
3) சூறாவளி வீசும் போது பாரிய அழிவுகளை ஏற்படுத்தும்
4) கிராமப்புற மக்கள் சகல வசதிகளுடனும் வாழுகின்றனர்.
5) இருவாட்டி மண்ணில் கணிசமான அளவு மணல் மண்ணும் கணிசமான அளவு களிமண்ணும் காணப்படும்.

**4. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**






ஒட்சிசனைச் - வங்கிக்குச் - பள்ளத்தை - தொடர்மாடி - சேதப்படுத்துதல்

1) மனிதன் வளியிலுள்ள ------------------------------------------------ சுவாசிக்கின்றான்
2) மேட்டில் இருந்து ஒரு பந்தைப் போடும்போது அது ------------------------------------ நோக்கி ஓடிச் செல்லும்
3) நகர்ப்புறங்களில் ------------------------------------------------ கட்டடங்கள் காணப்படும்.
4) பணத்தைப் பெறுவதற்கு ------------------------------------------------ செல்லுதல் வேண்டும்.
5) பாடசாலைச் சொத்துக்களைச் ------------------------------------------------ கூடாது.

**5. பொருத்தமான சொற்களை இணைக்குக.**

| | |
|---|---|
| 1) கடும் மழை | 1) அதிபர், ஆசிரியர், பெற்றோர்கள் |
| 2) கடும் காற்று | 2) வீட்டுக் கூரையைச் சேதப்படுத்தும் |
| 3) பாடசாலை அபிவிருத்தி | 3) வெள்ளப்பெருக்கு |
| 4) வைத்தியசாலை | 4) தந்தி அடித்தல் |
| 5) தபாற்கந்தோர் | 5) நோயாளி |

**6. பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக**

(1)  ............
(2)  ............
(3)  ............
(4)  ............
(5)  ............
(6)  ............
(7)  ............
(8)  ............

**7. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) வாழ்த்து மடல் அனுப்பப்படும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக?
2) கிராம மக்கள் எதிர்நோக்கும் குறைபாடுகள் இரண்டு தருக.
3) பாடசாலையிலுள்ள நூல் நிலையத்தின் முக்கியத்துவம் இரண்டு தருக.
4) வர்த்தக ரீதியில் காற்றைப் பயன்படுத்தும் இரு சந்தர்ப்பங்கள் தருக.
5) களிமண்ணிலும், மணல் மண்ணிலும் சிறப்பாக வளரக்கூடிய ஒவ்வொரு தாவரம் தருக.

**8. Write in the suitable coloum**

| Furniture | Fruit | Vegetable |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

chair, mango, beans, apple, table, pumpkin, desk, grapes, chilly

**9. Write about your family in 4 sentence**

1) ................................................................
2) ................................................................
3) ................................................................
4) ................................................................

# வாழ்க வளமுடன்

பெயர் : ந.கனிசா
ந.கனிஷியா
முகவரி : 40, யமுனா வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்
அகவை
05 இல்
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம





# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்


# நெடுங்கேணி சமூக சேவை அலுவலர் வவுனியா தெற்கிற்கு இடமாற்றம்

வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலராக கடமை புரிந்த த.தர்மேந்திரா வவுனியா தெற்கு பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்று கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டார்.

அந்த பிரதேச செயலகத் தின் சமூக சேவைகள் அலுவல ராக இருந்த ஆர்.தயானந்தா மிக அண்மையில் நோய் காரண மாக காலமானதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே அவர் இடமாற்றப்பட்டுள்ளார்.

த.தர்மேந்திரா மேலதிக பதில் கடமையாக முல்லைத்தீவு வெலிஓயா பிரதேச செயலர் பிரிவின் சமூக சேவைகள் அலுவலர் கடமையையும் ஆற் றுகின்றார். நெடுங்கேணி பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவ லராக வவுனியா மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் செ.சிறி நிவாசன் பதில் கடமையாற் றுகின்றார். இதேவேளை வட மாகாணத்தில் 11 பிரதேச செய லகங்களில் சமூக சேவைகள் அலுவலர் பதவி வெற்றிடமாக இருந்து பதில் கடமை அடிப்ப டையில் நடைபெறுவது குறிப்பி டத்தக்கது.

வட மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு இவ் வெற்றிடங்களை நிரப்ப எதுவித நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை என்பதும் குறிப்பி டத்தக்கது.

•இதனால் வறிய மக்களுக் குரிய சேவைகள் பெருமளவில் பாதிப்படைவதும் குறிப்பிடத் தக்கது. (90)

# மாறுகிறது பரீட்சை முறை

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகினால் வணிகமாணிக் கற்கைநெறி தொடர்பாக பரீட்சை முறையில் வெகுவிரைவில் மாற் றங்கள் கொண்டுவரப்பட வுள்ளன.

எதிர்வரும் காலங்களில் அரையாண்டுப் பருவ அடிப் படையிலான கற்கைக்கால அளவு பெறுமதியிடப்பட்ட கற்கை அலகு முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

ஏற்கனவே வணிகமாணிக் கற்கை நெறிக்கு பழைய மற்றும புதிய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டவர்கள் தற்போது நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து விரைவில் தங்கள் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்யுமாறு பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (10)

# இஸ்லாமியர்களின் முஹாரம் புதுவருடம்





இஸ்லாமியரை புதியதொரு வருடம் சந்திக்கவிருக்கின்றது. முஹாரம் மாதத்தை முதலாகக் கொண்டு ஆரம்பிக்கும் இஸ் லாமியப் புத்தாண்டு தூய பிர கடனத்தை ஒவ்வொரு முஸ்லி முக்கும் நினைவுபடுத்திக் கொண் டிருக்கிறது. நடப்பு வருடத்தில் செய்த பாவங்களையும் தவறுக ளையும் எண்ணி மனம் வருந்தி அவற்றுக்காக அல்லாஹ்விடத் தில் மன்னிப்புக்கோரி அவற்றை அழித்துவிட்டு புதியதொரு வரு டத்தை ஈமானிய உணர்வுக ளோடு வரவேற்று இஸ்லாத் துடன் பின்னிப்பிணைந்த வாழ்க் கைக்கான திட்டத்தை தீட்டிக் கொள்ள வேண்டிய தருணம் இது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவி லிருந்து மதீனாவில் குடியேறிய நிகழ்ச்சியை (ஹிஜ்ரத்தை) அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களின் வருடக்கணக்கு கணிக்கப்பட்டுள்ளது. எனவே இதனை ஹிஜ்ரி என்று அழைக் கின்றனர். அல்லாஹ்வின் அருட் கொடையால் நாம் ஹிஜ்ரி 1435 ஐ கடந்து ஹிஜ்ரி 1436இல் காலடி வைக்கிறோம்.

ஹிஜ்ரத் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே வருடத்தின் ஆரம்ப மாதமாக முஹாரம் கணிக்கப்படுகிறது. ஆங்கில ·தமிழ் சிங்கள வருடங்கள் சூரிய சுழற்சியைக் கொண்டு கணிக்கப்பட்டாலும் சந்திர சுழற்சியின் மூலமாகவே முஸ்லிம்களின் வருடங்கள் கணிக்கபடுகின்றன. இது இஸ்லாமிய வருடத்தின் தனித் துவத்தை எடுத்துக் காட்டுகிறது ஆனால் அனைத்தும் 12 மாதங்களைக் கொண்டவை

நபி (ஸல்) அவர்கள் மதினா வுக்கு வந்தபோது யூதர்கள் ஆஷூரா தினத்தில் நோன்பு நோற் பதை கண்டார்கள் நபியவர்கள் அவர்களிடத்தில் நீங்கள் தோற்கின்ற இந்த நோன்பு எந்த நாள் என்று வினாவினார் அதற்கு அவர்க்ள் இது ஒரு புனிதமான நாளாகும். இதில் அல்லாஹ் மூஸா (அலை) அவர்களையும் அ்வர்களது சமுதாயத்தின ரையும் ஃபிர் அவனிடமிருந்து காப்பாற்றினான் மேலும் ஃபிர் அவனையும் அவனது கூட்டத்தின ரையும் கடலிலே மூழ்கடித்தான் இதனால் மூஸா (அலை) அல் லாஹவுக்கு நன்றிசெலுத்தும் முகமாக அந்நாளில் நோன்பு நோற்றார்கள் . ஆகையால் நாங்களும் நோன்பு நோற்றுகின் றோம் என்றார்கள் நபி (ஸல்) அவர்கள். மூஸாவை பின் பற்றுவதற்கு உங்களைவிட நாமே தகுதியானவர்கள் என்று நபி (ஹல்) அவர்களுக்கு கூறி நோன்பு நோற்று பிறரையும் நோன்பு நோற்க ஏவினார்கள் முஸ்லிம்கள் அனைத்து விட யங்களிலும் யூதர்களுக்கு

**"இஸ்லாமிய புத்தாண்டு முஹாரம் புதுவருடம் நேற்யை தினம் ஆரம்பித் துள்ளது. இந்த நன்நாளை சகல முஸ்லிம் மக்களும் . மகிழ்வுடன் கொண்டாடி வருகின்றனர்"**

மாற்றமாக தங்களது நடவடிக் கைகளை ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதனையே இஸ்லாம் வலியுறுத்துகின்றது. யூதர்களும் ஆஷூரா நோன்பை நோற்றுவந்ததனால் அவர்க ளுக்கு மாற்றமாக ஒன்பதாவது நாளும் நோற்கவேண்டும் என்று நபிகளார் கூறியிருக்கின்றார். 'வருகின்ற வருடம் நான் இருந்தால ஒன்பதாவது நாளும் நோன்பு நோற்பேன்" என நபி ஸல்) அவர்கள் கூறினார்கள் ஆனால் நபியவர்கள் அதற்கு முன்னரே மரணித்துவிட்டார்கள்.

சிறப்புப் பொருந்திய புனிதமிகு 4 மாதங்கள் முஹர்ரம் துல் க.்.தா துல் ஹிஜ்ஜா, ரஜப் ஆகும்.

புனிதமான இம்மாதங்களில் பேணுதலாகவே இருக்கவேண் டும் எவ்வாறு ஹரத்தின் எல்லைகளின் புனிதத்துவத்தை மீறி பாவம் செய்தால் பன் மடங்கு பாவம் கிடைக்குமோ அதேபோன்று புனிதமான இம்மாதங்களில் பாவம் செய்வ தென்பது பன்மடங்கு பாவங்களை ஈட்டித்தரும் அதே போன்று இம்மா தங்களில் நன்மை செய்வது பல மடங்கு நன்மைகளையும் ஈட்டித்தரும். மேலும் இம்மாதங்க ளில போர் புரிவது தடுக்கப்பட் டுளளது. ஆனாலும் இறை நிராகரிப்பாளர்கள் போரை முதலில் ஆரம்பித்தால்அதனை தடுப்பதற்காக வேண்டி முஸ்லிம்க ளும் போர் புரியலாம் இந்த புனிதத தன்மை பொதுவாக முஹாரம் மாதம் உட்பட ஏனைய மூன்று மாதங்களுக்கும் பொது வானவையாகும்.

முஸ்லிம்களின் வருடக் கணிப்பீட்டில் முதல் மாதம் முஹாரம் மாதமாகும். உமர்(ரழி) அவ்ர்கள் தனது ஆட்சிக் காலத்தில் நபித் தோழர்களை ஒன்று சேர்த்து எப்பொழுது முதல இஸ்லாமிய வருடம் ஆரம்பிக் கப்படவேண்டும் என்று ஆலோ சனை கேட்டார்கள். இதன் அடிப்படையில் பலரும் பல மாதங்களை குறிப்பிட்டார்கள். இறுதியில் முஸ்லிம்களின் முதல் மாதமாக முஹாரம் மாதத்தையும் வருடம் ஆரம பிப்பது நபிகளார் மக்கா விலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நாள் என்றும் முடிவெ டுத்தார்கள்.

நபி(ஸல்) அவர்கள் உலகத் துக்கு அனுப்பப்பட்ட உன்னத நோக்கத்தை அடைந்துகொள் வதில் அவர்களுக்கு சாதகமாக அமைந்த ஒரு பாரிய திருப்பு முனையான ஹிஜ்ரத் நிகழ்ச் சியை அடிப்படையாககொண்டே இஸ்லாமிய புதுவருடம் கணிக் கப்படுகிறது.

நபியவர்கள் "ஹிஜ்ரத்" ஊடாக இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளையும் அத்துமீறல்களை யும் மிகைத்து தூய இஸ் லாத்தை வாழ்வில் பிரதிபலிக்கச் செய்வதற்கான புதியதொரு வாழ்க்கையை தெரிவுசெய்தார் கள். அதற்கான இலட்சியப் பயணமே ஹிஜ்ரத் நிகழ்வாகும். இன்று ஒவ்வொரு வருடமும் இஸ்லாமிய புத்தாண்டின் போதும் இதனை நினைவுபடுத்தும் நாம், எம் வாழ்வில் எத்தனை தீய செயல்களை விட்டும் ஒதுங்கி புதிய வாழ்வுக்கு எம்மைத் தயாா்ப் படுத்தியிருக்கிறோம்?

வருடத்தின் இறுதிக்கட் டத்தில் இருக்கும் நாம், இந்த வருடத் தில் அமைந்த எமது செயற்பாடுகளை ஒருகணம் மீள்பரி சீலனை செய்ய வேண்டிய தேவை யுண்டு. எத்தனை தடவைகள் அல்குர் ஆனை ஓதி முடித்தேன்? பர்ளுத் தொழுகைகளை உரிய நேரத்திற்கு நிறைவேற்றி னேனா?

எத்தனை தடவைகள் தஹஜ் ஜூத் தொழுகையை நிறைவேற்றி னேன்? சுன்னத்தான தொழுகை களை எந்தளவு நிறைவேற்றி னேன்? எனது சொத்திலிருந்து எத்தனை ரூபாய்களை இறை பாதையில் செலவு செய்தேன்? மற்றைய சகோதரர்களுடனும் இரத்த உறவுகளுடனும் உறவுக ளைப் பேணி நடந்தேனா?

மொத்தத்தில் இறைவனுக் கும் மனிதனுக்கும் நான் நிறைவேற்ற வேண்டிய கடமை களை எந்தளவு நிறைவேற்றியுள் ளேன்? என எமக்குள் நாம் கேட்டுக்கொள்வதோடு, செய்த பாவங்களுக்கும் தவறுகளுக்கும் அல்லாஹவிடத்தில் மன்றாடி பாவமன்னிப்புத் தேடிக்கொள்ள வேண்டும். இந்த வருடத்தைவிட அடுத்த வருடம் எனது வாழ்வில் ஈமானியப் பூக்கள் பூத்துக் குலுங்கவேண்டும் என்ற உறுதிப் பாட்டையும் எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

எனவே, எமது உள்ளத்தையும் புறத்தையும் பரிசுத்தப்படுத்தி புதிய வருடத்தோடு நிஜங்களின் நிதர்சனமாய்த் திகழும் இஸ்லாத்தை இம்மண்ணில் உயிா வாழச்செய்ய முன்வருவோம். ஒவ்வொரு வருடமும் எம்மைவிட் டுப பிரிந்துசெல்லும் போது எமது ஆயுட்காலம் குறைவ டைந்து மரணம் எம்மை அண் மித்துக் கொண்டிருக்கிறது என்ப தனை நினைவில் வைத்து கொள் வோம்.

மேலும் பூக்கவிருக்கும் புது வருடத்துடன் எமக்கு மத்தியில் காணப்படும் அனைத்து பிளவுக ளையும் மனக்கசப்புக்களையும் உதறி தள்ளிவிட்டு சகோதரத்து வத்தை, பரஸ்பர புரிந்துணர்வை கட்டியெழுப்பி இஸ்லாத்தின் இலச சினையை உயரச்செய்வோம்.

அல்ஹாஜ் மௌலவி A.M.A. அஸீஸ்
*உலமா சபை தலைவர்,*
*யாழ்.கிளிநொச்சி மாவட்டம்.*

# கனடாவில் தடை செய்யப்பட்ட இயக்கங்களுடன் தொடர்பை பேணுவது தண்டனைக்குரிய குற்றம்

## வெளிவிவகார அமைச்சின் செயலர் தீபக் ஒபராய்



கனடாவில் ஒரே வாரத்தில், இரண்டு படை வீரர்கள் பயங்கரவாத தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளமை பயங்கரவாதம் பற்றிய கனடாவின் பார்வையை இறுக்கமடையச் செய்துள்ளது. இதனால், கனடாவில் தடை செயயப்பட்ட இயக்கங்களான விடுதலைப் புலிகளுடனோ அல்லது உலகத் தமிழர் இயக்கத்துடனோ தொடர்பைப்பேணுவது தண்டனைக்குரிய குற்றம் என கனடிய வெளிவிவகார அமைச்சின் செயலரும், கனடியப் பாதுகாப்பு கட்டமைப்பின் உறுப்பினருமான தீபக் ஒபராய் தெரிவித்துள்ளார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது

கனடாவில் விடுதலைப்புலிகள் அமைப்பும் உலகத் தமிழர் இயக்கமும் பயங்கரவாத இயக்கங்களாகத் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றுடன் தொடர்பு கொள்வது தண்டனைக்குரிய குற்றம். யாராவது தமது அறிவுக்கெட்டிய வகையில் தடை செய்யப்பட்ட இந்த அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணினால் அவர்கள் கனடிய குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவார்கள்.

அத்தோடு கனடிய பொது மக்கள் பாதுகாப்பமைச்சின் இணையத்தள விளக்கங்களையும் கருத்திலெடுக்க வேண்டுமெனவும், ஒருவர் தனது சுய அறிவுக்கு எட்டிய வகையில் இந்த அமைப்புக்களின் எந்தவொரு செயற்பாடுகளிலும் நேரடியாகவோ மறைமுகமாவோ ஈடுபடுகிறார் அல்லது அவ்வாறானதொரு நடவடிக்கைக்குப் மறைமுகமாக ஒத்தாசை புரிகிறார் என்பது கூட குற்றமாகக் கருதப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத அமைப்புக்களின் நடவடிக்கைகளில் பங்கேற்றார்கள், துணை போனார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் ஆகக்கூடியது 14 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படுவதுடன், தண்டனையின் பின்னரான காலத்தில் கண்காணிப்புக் உட்படுத்தப்படும் நிலை தொடரலாம என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதிகளின் தற்கொலை தாக்குதலால் விமான நிலையங்களுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு



(சென்னை)

தீவிரவாதிகளின் தற்கொலை படை தாக்குதலின் எதிரொலியாக சென்னை விமான நிலையத்துக்கு உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அகமதாபாத் மற்றும் மும்பையில் இருந்து புறப்படும் ஏர்.இந்தியா விமானத்தில் தீவிரவாதிகள் தற்கொலைப்படை தாக்குதல் நடாத்த திட்டமிட்டு இருப்பதாக உளவுத்துறை எச்சரித்துள்ளது. இதையடுத்து மும்பை, அகமதாபாத், கொச்சி விமான நிலையங்கள் உச்சகட்ட பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் மற்ற நகரங்களில் உள்ள விமான நிலையங்களுக்கு 2ஆம் கட்ட பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சென்னை விமான நிலையத்திலும் தீவிர சோதனைக்கு பின்னரே பயணிகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக சென்னையில் இருந்து நேற்று காலை டில்லி, மும்பை, கொச்சி, அகமதாபாத்துக்கு புறப்பட்டு சென்ற ஏர்.இந்தியா விமானப் பயணிகளை தீவிரமாக கண்காணித்ததோடு அவர்களின் அனைத்து உடமைகளும் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக் தெரிவிக்கப்படுகின்றது.

## உலகச் செய்திகள்

# அனல் மின் நிலையங்களுக்கு கங்கை வழியாக நிலக்கரி

## இந்திய வழிப் போக்குவரத்து ஆணையம் திட்டம்



வடக்கு, கிழக்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள 21 அனல் மின் நிலையங்களுக்கு கங்கை நதி வழியாக நிலக்கரி கொண்டு செல்லும் திட்டம் விரைவில் செயற்படுத்தப்படவுள்ளது.

இந்திய நீர்நிலைகளில் 15,544 கிலோமீற்றர் நீளமுடைய வழிகள் போக்குவரத்துக்கு ஏற்றவையாக கண்டறியப்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் தற்போது 5,700 கிலோமீற்றர் மட்டுமே போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படுகின்றன.

அமெரிக்க போக்குவரத்தில் 21 சதவீதம் நீர்வழித்தடமாகும். எனவே சர்வதேச நாடுகளுக்கு இணையாக நீர்வழித்தட போக்குவரத்தை அதிகரிக்க இந்திய உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்து ஆணையம் பல்வேறு திட்டங்களைத் தயாரித்து வருகிறது.

அதன்படி வடக்கு, கிழக்கு பிராந்தியத்தில் அலகாபாத் முதல் ஹால்டா வரை அமைந்துள்ள 21 அனல் மின் நிலையங்களுக்கு கங்கை நதி வழியாக நிலக்கரியை கொண்டு செல்ல நீர்வழிப் போக்குவரத்து ஆணையம் புதிய திட்டத்தை தயாரித்துள்ளது.

இதுகுறித்து ஆணையத்தின் தலைவர் அமிதாப் வர்மா 'பிசினஸ் லைன்' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

முதல்கட்டமாக பீகார் மாநிலம் பார் நகரில் அமைந்துள்ள அனல் மின் நிலையத்துக்கு நிலக்கரி எடுத்துச் செல்லத திட்டமிட்டுள்ளோம் என்றார்.

நீர்வழிப் போக்குவரத்து மிகவும் சிக்கனமானது. தற்போது மேற்கு வங்கம் பராக்காவில் உள்ள அனல் மின் நிலையத்துக்குசாலை மார்க்கமாக நிலக்கரி கொண்டு செல்லப்படுகிறது. இந்த அனல் மின் நிலையத்துக்கு நீர்வழித்தடத்தில் நிலக்கரியை எடுத்துச் சென்றால் 20 சதவீதம் வரை செலவைக் குறைக்க முடிவதுடன் சுற்றுச்சூழல் மாசடைவதும் குறையும் என்றார்.

# பாகிஸ்தான் விழா அழைப்பிதழில் ஜனாதிபதிக்கு பதிலாக மன்மோகன்



பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் பொருளாதார வளர்ச்சி நிறுவனம் உள்ளது. இங்கு உயர் அதிகாரிகளின் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது. அதற்கான அழைப்பிதழ் அச்சிடப்பட்டது. அதில் கூட்டத்துக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி மம்னுன் உசேன் தலைமை தாங்க முடிவு செய்யப்பட்டது.

ஆனால் அந்த இடத்தில் அவரது பெயருக்கு பதிலாக இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் பெயர் தவறுதலாக அச்சிடப்பட்டது. இத்தவறு கடைசி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே பின்னர் அது சரி செய்யப்பட்டது. இருந்தாலும் அந்த அழைப்பிதழ் விழாவில் பங்கேற்கும் பல முக்கிய உயர் அதிகாரிகளுக்கும், பிரமுகர்களுக்கும் அனுப்பப்பட்டு விட்டது. இச் சம்பவத்தால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# ஈராக் -சிரியாவில் இரசாயனகுண்டு வீச்சு; ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல்

ஈராக் மற்றும் சிரியாவில் இரசாயன குண்டுகளை வீசி ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகள் தாக்குதல் நடாத்துவதாக தெரிவிக்கப்படு கின்றது.

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கத்தை தகர்க்க அவர்கள் மீது அமெரிக்கா குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. அவர்களின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் திணறும் தீவிரவாதிகள் அங்கு இரசாயன குண்டுகளை வீசுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஈராக்கில் கடந்த செப்ரெம்பர் 11ஆம் திகதி துலுயாநகரில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் குண்டு வீச்சில் பொலிஸ்காரர்கள் காயம் அடைந்தனர். அவர்களுக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

அவர்களை பரிசோதித்த வைத்தியர்கள் குளோரின் வாயு தாக்குதலால் ஏற்பட்ட காயம் என தெரிவித்துள்ளனர். இதன் மூலம் தீவிரவாதிகள் இரசாயன குண்டு வீசியது தெரியவந்துள்ளது. அமெரிக்காவின் வோஷிங்டன் போஸ்ட பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

அதேபோன்று மேலும் 2 தாக்குதல்களின் போது குளோரின் வாயு குண்டுகளை தீவிரவாதிகள் வீசியதாக ஈராக் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே ஈராக்கின் பாக்தாத் நகரை ஐ.எஸ்.., ஐ.எஸ். தீவிரவாதிகளால் நெருங்க முடியவில்லை. அவர்களுக்கு எதிராக அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும் தொடர்ந்து குண்டு மழை பொழிகின்றன.

# துஷ்பிரயோகிக்க முற்பட்டவர் கொலை பெண்ணுக்கு தூக்குத்தண்டனை



ஈராக்கில் பெண்ணை துஷ்பிரயோகத்துக்குள்ளாக்க முற்பட்ட நபரை கொலை செய்த 26 வயது பெண்ணுக்கு ஈரானில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த 2007ஆம் வருடம், ஈரான் உளவுத்துறையில் பணியாற்றிய நபர், பெண்ணை துஷ்பிரயோகம் செய்ய முயன்ற போது அப்பெண் அவரைக் கொலை செய்துள்ளார். இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில் அவருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்ற நீதிமன்றம் உத்தர விட்டது. இதனால் ஈராக்கில் பல்வேறு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன

# ஜம்மு-காஷ்மீர், ஜார்கண்ட் மாநிலங்களுக்கு 5 கட்டமாக சட்டப்பேரவை வாக்குப்பதிவு

ஜம்மு- காஷ்மீர் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களுக்கு 5 கட்டங்களாக தேர்தல் நடாத்தப்படவுள்ளது. இதற்கான திகதிகளை தலைமை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீர், ஜார்கண்ட் மாநிலங்களில் ஜனவரி மாதத்துடன் சட்டப்பேரவைக்கான காலம் நிறைவு பெறுகிறது. இதைத் தொடர்ந்து அந்த மாநிலங்களுக்கான தேர்தல் திகதி விவரங்களை தலைமை தேர்தல் ஆணையர் வி.எஸ்.சம்பத் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக டில்லியில் செய்தியாளர்களிடம் தலைமை தேர்தல் ஆணையர் சம்பத் கூறியதாவது, குறித்த மாநிலத்துக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பித்து டிசம்பர் 20ஆம் திகதி வரை தேர்தல் நடாத்தப்படவுள்ளது.

காஷ்மீரில் சமீபத்தில் போரினால் ஏற்பட்ட இழப்பு, சட்ட ஒழுங்கு நிலை, பண்டிகைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அரசியல் கட்சிகளுடன் நடாத்திய ஆலோசனையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஐந்து கட்டங்களாக நடாத்தவுள்ள தேர்தலின் வாக்கு எண்ணிக்கை டிசம்பர் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் டில்லியில் வெற்றிடமாகவுள்ள 3 சட்டப்பேரவை தொகுதிகளிலும் எதிர்வரும் நவம்பர் 25 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறும்" எனத தெரிவித்துள்ளார்.

# அழிவை நோக்கி யாரையும் நான் அழைக்கவில்லை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



நம்பிக்கையோடு இருங்கள், நான் அழிவைநோக்கி யாரையும் அழைக்கவில்லை. சுபீட்சமான வாழ்வு நோக்கியும், ஒளிமயமான எதிர்காலத்திற்காகவுமே உங்களை அழைக்கின்றேன் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் யாழ்.செயலகத்தில் நேற்று வேலைவாய்ப்புக் கோரி வருகை தந்த 100 இற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் மத்தியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நீங்கள் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டு பணிபுரியச் செல்லும் அலுவலகங்களில் கண்ணியமாகவும், அக்கறையோடும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன், கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றவர்களாக நீங்கள் செயற்பட வேண்டும்.

வேலைவாய்ப்பை உங்களுக்கு பெற்றுத் தருவதற்கு நானும், பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி முயற்சிகளையும் எடுத்து வருகின்றேன். நீங்கள் தொடர்ந்தும் எம்மோடு இணைந்து செயற்படுகின்ற போதுதான் நானும் உற்சாகத்தோடு முயற்சி செய்து உங்களுக்கு வேலைவாயப்புக்களைப் பெற்றுத் தரமுடியும்.

இதேவேளை, வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்காக எவருக்கும் பணம் கொடுக்க வேண்டாம். அவ்வாறான நடவடிக்கைகளுக்கு நான் ஒருபோதும் அனுமதியளித்ததில்லை. அது எமது கட்சியின் கொள்கையல்ல. நம்பிக்கையோடு இருங்கள் உங்களுக்கான வேலைவாய்ப்புகள் விரைவில் பெற்றுத் தரப்படும்.

அத்துடன், நீங்கள் வெளிப்படையாகவும், நம்பிக்கையுடனும் எமது மக்களுக்கு ப்ணியாற்றுவதையே நான் விரும்புகின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தின் போது ஈ.பி.டி.பி.யின் பிரதேச இணைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

## புலிகள்...

ஆனால் இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தில் அலட்சியமாக இருந்த காரணத்தினாலேயே ஐரோப்பிய நாடுகளும் அசட்டையாக இருந்தன.

அது விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கத்துக்கு வழியேற்படுத்தியது. இன்னொரு புறத்தில் விடுதலைப் புலிகளுடனான பிரச்சினையில் இலங்கை அரசாங்கத்தை ஐரோப்பிய நாடு கள் கைவிட்டுள்ளன என்பதற்கான சமிக்ஞையாகவும் இதனை எடுத்துக் கொள்ளலாம்.

2006 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் மீதான தடை விதிக்கப்பட்டது. அப்போதைய வெளிவிவகார அமைச்சு இந்த விடயத்தில் சிறப்பாக செயல்பட்டது. இன்னொரு புறத்தில் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மனைவி சுகந்திகா இந்த விடயத்தில் பாரிய பங்களிப்பை வழங்கியிருந்தார்.

ஆனாலும் இலங்கை அரசாங்கம் இராஜதந்திர விடயங்களில் அவரது பங்களிப்பை தொடர்ந்தும் பெற்றுக் கொள்ளாமல் ஒதுக்கி விட்டது. ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்பை முன்னுதாரணமாகக் கொண்டு எதிர்வரும் காலத்தில் அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகளில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படலாம்.

அந்த வகையில் இந்தத் தடை நீக்கத்தின் மூலமாக விடுதலைப் புலிகள் அமைப்பு சர்வதேச ரீதியாக பாரிய வெற்றியொன்றைப் பெற்றுள்ளது. மறுபுறத்தில் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தினால் புலிகள் அமைப்பின் மீதான தடை நீக்கம் இலங்கைக்குப் பெரும் அபாயமாக உருவெடுத்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைக்குழுவின் அறிக்கையின் பின்னர் இலங்கை மீது சில தடைகள் விதிக்கப்படலாம் என்றும் தயான் ஜயதிலக தனது நேர்காணலில் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியை...

ரத்ன தேரர் இதற்கு அடுத்த கிராமம். இதனையே ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி சென்ற பின்னரும் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்கள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடனும், வேறு சிலருடனும் பேச்சுக்களைத் தொடர்ந்தனர்.

ஜாதிக ஹெல உறுமயவின் யோசனைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் முன்னிலையில் சமர்ப்பித்து ஆராய்வதாக பசில் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக் குறித்து திருப்தியடையாதவர்களாக ஜாதிக ஹெல உறுமயவினர் வெளியேறினர்.

குறிப்பாக ஜனாதிபதி இடை நடுவில் வெளியேறியது குறித்து அவர்கள் கடும் அதிருப்தி வெளியிட்டனர். தங்களை அவமானப்படுத்தி விட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

மறுநாள் புதன்கிழமை ஜனாதிபதி ஜாதிக ஹெல உறுமயவின் ஓமல்பே தேரரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தான் அவ்வாறு நடந்துகொண்டதற்காக மன்னிப்புக் கோரினார். ஜாதிக ஹெல உறுமய தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்த பௌத்த மதகுருமாரை அவமதிக்கும் எண்ணத்தில் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டார்.

## சாதாரண...

புஷ்பகுமார தெரிவித்தார்.

திட்டமிட்டபடி எதிர்வரும் டிசம்பர் மாதம் 9 ஆம் திகதியிலிருந்து 18 ஆம் திகதிவரை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நடைபெறுமெனவும் அவர் தெரிவித்தார்.

2015 ஜனவரி மாதத்தில் பாப்பரசரின் இலங்கை வருகையும், ஜனாதிபதித் தேர்தலும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுவதால், பரீட்சை தினங்களிலும் மாற்றம் வரலாம் எனக் கருதப்பட்டது. இந்நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைவாக க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையானது ஆயிரத்து 176 நிலையங்களில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கான நேர அட்டவணையை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தள முகவரியில் பார்வையிடலாம்.

இதுவரை இத்திகதிகளில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. அதனால் திட்டமிட்டபடி டிசம்பரில் உரிய காலப் பகுதியில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சை நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.எம்.என்.ஜெயந்த புஷ்பகுமார மேலும் தெரிவித்தார்.

## போர்க்குற்ற...

கைதான நபரிடமிருந்து போர்க்குற்ற விசாரணைக்காக சமர்ப்பிக்கப்படவிருந்த படிவங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், அவரை வவுனியாவுக்கு கொண்டு சென்று விசாரணைக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர் கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதனாசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் வடக்கு மாகாணத்தில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களுக்கு 18 வகையான கற்கை நெறிகளைக் கற்பிக்கும் போதனாசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றது.

தகவல் தொடர்பாடல் தொழிலநுட்பவியலாளர், கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துநர், மின் மோட்டார் மீள் முறுக்குநர் (வைண்டிங்), குளிரூட்டி மற்றும் வாயு சீராக்கி தொழில்நுட்பவியலாளர், நீர்க் குழாய் பொருத்துநர் (பிளம்பிங்), பேக்கரி ஊழியர்கள், சமையற்காரர், உணவக ஊழியர்கள், அறை ஊழியர்கள் (ஹோட்டேல் மற்றும் வீட்டுப் பரிபாலனம்), மோட்டார் சைக்கிள் திருத்துநர், முச்சக்கர வண்டி திருத்துநர், கட்டட நிர்மாண உதவியாளர், ஆண்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), விவசாய உபகரணங்கள் திருத்துநர், அழகுக் கலை வல்லுநர், வீட்டு மின்னிணைப்பாளர் ஆகிய வெற்றிடங்கள் காணப்படுகின்றது.

கல்வித் தகைமையாக க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் உட்பட 4 திறமைச் சித்திகளுடன் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

தொழில்சார் தகைமையாக அரசாங்க அங்கீகாரம் பெற்ற NVQ மட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 3 வருட காலத்திற்கு மேல் தொழில் அனுபவச் சான்றிதழ் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பந்தப்பட்ட துறையில் உள்நாடு அல்லது வெளிநாட்டில் இரண்டு வருடத்திற்கு மேலான அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமைகளுடைய ஆர்வமுடையவர்கள் தங்கள் சுயவிபரத்துடன் விண்ணப்பிக்கும் கற்கைநெறியைக் குறிப்பிட்டு எதிர்வரும் 14.11.2014 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை, முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# 25 பவுண் நகையை மகள் திருடியதாக தாய் முறைப்பாடு

தனது நகை மற்றும் பணத்தை மகள் திருடிக் கொண்டு நேற்று முன்தினம் இரவு ஓடிவிட்டதாக கரவெட்டி கரணவாய் பகுதியைச் சேர்ந்த தாய் ஒருவர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

வீட்டிலிருந்த 25 பவுண் நகை மற்றும் 2 இலட்சம் ரூபாய் காசு ஆகியவற்றை எடுத்துக்கொண்டு கிளிநொச்சி இரணைமடுவை சேர்ந்த இளைஞன் ஒருவருடன் மகள் சென்றுவிட்டதாக தாய் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் திருட்டு குற்றச்சாட்டில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் மேலும் கூறினர்.(18)

# புலமைப்பரிசில் பரீட்சை ஆசிரியருக்கு தெளிவுபடுத்தல்

புதிய முறைமையின் கீழ், அடுத்தாண்டு நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பில் ஆசிரியர்களை தெளிவுபடுத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் புதிய திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

இதன்கீழ், பரீட்சைகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி வினாப்பத்திரம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்தார்.

அத்துடன் ஆசிரியர்களுக்கு பரீட்சை தொடர்பில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்தாண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஒரு வினாப் பத்திரமே வழங்கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## நால்வரை....

பிடித்துக் கட்டி வைத்தபோது நாய் திடீரென கடந்த வெள்ளிக்கிழமை மாலை இறந்தது. இதனையடுத்து நாய் இறந் ததற்கான காரணத்தைக் கண்டறியவும், நாயினுடைய நோய்த் தன்மையை அறியவும், அதன் தலை வெட்டப்பட்டு கொழும்பிலுள்ள ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## அதிகரித்துள்ள....

வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எம்.ரீ. ஹசன் அலி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நிவாரணங்கள் கவர்ச்சிகரமாக இருந்த போதும் வரவு-செலவுத் திட்டத்தில் காணப்படும் துண்டு விழும் தொகை முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரி த்துக் காணப்படுகிறது. எனவே வரவு-செலவுத் திட்ட ஆலோசனைகளை அமுல்படுத்தும் போது மக்கள் பாரிய பொருளாதார அழுத்தத்தை எதிர்கொள்ள நேரிடலாம் என்றும் அவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

அறிவிக்கப்பட்ட நிவாரணங்களை நிறைவேற்றும் பட்சத்தில் மக்கள் பொருளாதார அழுத்தத்துக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் எம்.ரீ.ஹசன் அலி மேலும் தெரிவித்துள்ளார்.

## ஏனைய...

இதனை அவதானிக்க முடிந்தது. அவர்கள் வடக்கு மாகாண சபையால் பயனில்லை என்பதை உணர்ந்துள்ளனர். வடக்கு மாகாண சபையினர் யாழ்தேவி வருகையைப் புறக் கணித்தனர். ஆனால் பொது மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்றனர் என்பதை அவதானிக்க முடிந்தது. எனவே புலம்பெயர் புலிகளின் கருத்துக்களை அவர்கள் புறக்கணித்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

- வலி.கிழக்கு பிரதேச சபையின் அசமந்தம் -

# பைற்றோலை வீதியை புனரமைக்க அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு



பைற்றோலை கிராம மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அச்சுவேலி பிரதான வீதியில் வழிமறித்து தமது வீதிப்புனரமைப்புப் பணிகளை வலி.கிழக்கு பிரதேச சபை நிர்வாகம் இடைநடுவில் கைவிட்டிருப்பதால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தனர்.

கோப்பாய், அச்சுவேலி பிரதான வீதியில் குழுமியிருந்த பைத்தோலை நாவற்காடு காட்டுமலைக் கந்தன் கோயில் கிராம மக்களின் கோரிக்கைக்கு இணங்க குறித்த வீதியை நேரில் சென்று அமைச்சர் பார்வையிட்டார்.

சுமார் ஒருகிலோ மீற்றர் தூரமுடைய தமது வீதியை வலி.கிழக்கு பிரதேசசபையின் ஆளும்தரப்பினர் பாகுபாடு காட்டியே இடைநடுவில் கைவிட்டுள்ளதாகவும் இவ்வீதிப் புனரமைப்புக்காக ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் காரணத்தை வெளிப்படையாக கூறாமல் இடைநடுவில் நிறுத்தியதை பல தடவைகள் பிரதேச சபை நிர்வாகத்தினருக்கு எடுத்துக் கூறிய போதும் தமக்கு நியாயம் கிடைக்கவில்லை என்பதால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமக்கு நியாயம் பெற்று தருவார் என்ற நம்பிக்கையில் தான் உங்களிடம் கோரிக்கை முன்வைப்பதாகத் தெரிவித்தனர்.

அந்த கிராம மக்களின் கோரிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விரைவில் நிறைவேற்றித் தருவதாக அமைச்சர் கூறிய போது பைற்றோலை கிராம மக்கள் நன்றி ஆரவாரம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (03)

# இராணுவ ட்ரக் மோதி குடும்பஸ்தர் படுகாயம்

இராணுவ ட்ரக் மோதியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று இரவு 7.30 மணியளவில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உடுவில் மானிப்பாய் வீதியில் உள்ள மதவடி பகுதியில் மோட்டார் சைக்கிளும் இராணுவ ட்ரக் வண்டியும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் வவுனியா, மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் ஜெயராசா என்பவரே படுகாயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்தவர் இராணுவத்தினரால் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் அங்கிருந்து அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# மதுவினை ஒழிக்கக்கோரி நாவாந்துறையில் பேரணி



(யாழ்ப்பாணம்)

மதுவினை ஒழிக்கக் கோரி பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்த பேரணி ஒன்று நேற்று நடைபெற்றது.

கியூமெடிக்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை நாவாந்துறைப் பகுதியில் இருந்து, நாவாந்துறை சென்மேரீஸ் தேவாலயம் வரை இந்தப் பேரணி நடைபெற்றது.

இந்தப் பேரணியில், பணத்தினை விரயமாக்க வேண்டாம், சேமிப்பதற்கு ஊக்குவிப்போம், இளைஞர்கள் குடிப்பதனால், எதிர்காலம் பாதிக்கப்படும், குடி போதைப்பாவனை குடும்ப வன்முறைக்கு காரணமாகின்றது போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை தாங்கியவாறு அந்தப் பேரணியில் முதியவர்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (25)

# 9 இலட்சம் வாக்காளருக்கு அடையாள அட்டை இல்லை

இலங்கையிலுள்ள வாக்காளர்களில் 9 இலட்சம் பேருக்கு தேசிய அடையாள அட்டை இல்லை என்றும் இவர்களில் 6 இலட்சம் பேருக்கு வாக்களிப்பதற்குரிய எந்தவொரு ஆவணமும் இல்லை என்றும் கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனால், எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது 6 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க முடியாது போவர் என்று தெரிவித்துள்ள கபே அமைப்பு, குருநாகலை மாவட்டத்திலுள்ளவர்களில் பெரும்பாலானவர்களே அடையாள அட்டை இன்றி உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

# வடக்கிற்கான பயணக்கட்டுப்பாடு பல்வேறு நாடுகள் எச்சரிக்கை

வெளிநாட்டுப் பிரஜைகள் வடக்கு மாகாணத்திற்கு பயணம் செய்வது தொடர்பில் காணப்படும் பயணக்கட்டுப்பாடு குறித்து பல நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்ரேலியா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்டன இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை விஜயம் தொடர்பில் பல நாடுகள் தமது நாட்டுப் பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்துள்ளன. அத்தியாவசியமில்லை என்றால் இலங்கையின் சில பகுதிகளுக்கான விஜயங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கிற்கு பயணம் செய்யும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு உடையவர்கள் முன்கூட்டியே அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற பாதுகாப்பு அமைச்சின் நிபந்தனை குறித்து பல நாடுகள் தமது நாட்டு பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

இலங்கைக்கான பயணங்களின் போதும் குறிப்பாக நாட்டின் ஒரு சில பகுதிகளுக்கான பயணங்களின் போதும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியது அவசியமாகின்றது என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# ஐ.தே.க.விற்கு வராதீர்; அறிவுரை கூறும் சஜித்?

(கொழும்பு)

ஐ.தே.க.வில் இணைந்து கொள்ளத் தயாராக உள்ள ஆளுங்கட்சி முக்கியஸ்தர்களை தடுக்கும் முயற்சியில் சஜித் பிரேமதாச ஈடுபட்டிருப்பதாக, தகவல்கள் வெளியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அவர் ஆளுங்கட்சியுடன் அதிருப்தியில் உள்ள முக்கியஸ்தர்களைத் தனிப்பட்ட ரீதியில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இன்றைய தினம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் எண்ணத்தில் இருந்த வசந்த சேனநாயக்கவை கடந்த வெள்ளிக்கிழமை சஜித் தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார்.

அதன்போது வசந்த சேனநாயக்க ஐ.தே.க.வில் இணையவுள்ள தகவலை உறுதிப்படுத்திக் கொண்டபின், அவ்வாறு கட்சிமாற வேண்டாம் என்று சஜித் கடுமையாக அறிவுரை கூறியுள்ளார்.

ரணிலை நம்பி எந்த முடிவையும் எடுக்க வேண்டாம். அவர் நம்பிக்கைத் துரோகி. சொன்னதைச் செய்யமாட்டார். 2001 ஆம் ஆண்டு அரசியல் மாற்றத்துக்குக் காரணமாக இருந்த எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரை ஆட்சிக்கு வந்த பின் உதாசீனப்படுத்தி விட்டார். அவர்கள் அரசியல் அநாதைகளாக மீண்டும் சுதந்திரக் கட்சியில் சரணாகதி அடைய நேர்ந்தது.

உங்களுக்கும் அவர் என்ன தான் வாக்குறுதிகள் அளித்தாலும் ஆட்சிக்கு வந்தால் அவற்றை மறந்துவிடுவார். நன்றாக தீர்மானித்து முடிவெடுங்கள். அரசியல் எதிர்காலத்தை நாசமாக்கிக் கொள்ளாதீர்கள் என்று நீண்ட நேரம் சஜித் அறிவுரை கூறியுள்ளார்.

சஜித்தின் அறிவுரை காரணமாக இன்றைய தினம் வசந்தவின் கட்சிதாவல் நடைபெறாது என்று நம்பகமான தகவல் வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

கட்சி தாவும் தனது முடிவை அவர் தற்போது மீள்பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகள் மீதான தடை நீக்கம் மேன்முறையீடு செய்ய முடியும்

## கூறுகிறார் ரணில்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கத்துக்கு எதிராக இலங்கை அரசாங்கத்தினால் மேன்முறை யீட்டை மேற்கொள்ள முடியும். எனினும் அரசாங்கம் எவ்வித மேன்முறையீட்டையும் மேற்கொள்ள முனையவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் விடுதலைப் புலிகளின் தடை நீக்கத்துக்கு எதிராக மேன்முறையீடு செய்ய அரசாங்கம் துணியாத போது ஐரோப்பாவில் உள்ள விடுதலைப் புலிகளின் பெருமளவு சொத்துக்கள் மீண்டும் கே.பி. குழுவுக்கு சென்றடைந்து விடும்.

எனவே அரசாங்கம், ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் விடுதலைப்புலி தடை நீக்கத்துக்கு எதிரான மேன்முறையீட்டை மேற்கொள்ள வேண்டும்.

எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்புரிமை இல்லாமையால் குறித்த மேன்முறையீட்டை அரசாங்கத்தினால் நேரடியாக மேற்கொள்ள முடியாது என அரசாங்கம் கூறிவருகிறது.

இதேவேளை இலங்கையின் சார்பில் குறித்த மேன்முறையீட்டை செய்யுமாறு ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் ரணில் கூறினார்.

விழிநீர் சொரிந்த அஞ்சலிகள்...

அமரர்

**கயிலாசபிள்ளை நந்தகுமார்**

(ஊடகச் செயலாளர்
வட மாகாண ஆளுநர் அலுவலகம்
கல்வி இணைப்பாளர்
வட மாகாண அமைச்சு)



அன்னாரின் திடீர் மறைவால் ஆழ்ந்த வேதனை அடைகின்றோம். அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சந்தி!!!

**தினமுரசு குடும்பம்** (இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.